மலர்-5 இதழ்-134 16 - 31 மார்ச் 2022 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

**உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்**




விருப்ப சந்தா

# நோய் வராமல் தடுக்கும் ஸ்ரீ அவதூாது ரோக நிவர்த்தீஸ்வரர்

## திருமணத்தில் ஏழுமலையான் ஆசி வேண்டுமா?

# திருமணப் பத்திரிகையை ஏழுமலையானுக்கு அனுப்புங்கள்

உங்கள் வீட்டில் திருமணம் நிச்சயமாகியுள்ளதா, பத்திரிகையை திருப்பதி திருமலை வெங்கடாஜலபதிக்கு அனுப்பிவையுங்கள், ஏழுமலையானின் ஆசியுடன் உங்கள் முகவரிக்கு பிரசாதம் வந்து சேரும், ஏழுமலையானின் ஆசியையும் பிரசாதத்தையும் எவ்வாறு பெறுவது என்பதை எளிமையாக பார்ப்போம்.

திருமண பத்திரிக்கையை ஒரு மாதம் முன்பு திருப்பதி கோயிலுக்கு

**SRI LORD VENKATESWARA SWAMY,**
The Executive Officer
TTD Administrative Building
K.T.Road, Tirupati - **517501**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

திருப்பதி கோவிலில் இருந்து, நீங்கள் அனுப்பி வைக்கும் முகவரிக்கு, பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

தம்பதிகள் கையில் கட்டிக் கொள்ளும் கங்கணம் குங்குமம் மஞ்சள் அனுப்பி வைக்கப்படும். திருமண முக்கியத்துவத்தை சொல்லும் ஒரு புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

பலருக்கு இந்த நடைமுறை தெரிவதில்லை. உங்களுக்கு தெரிந்தவர்கள், உறவினர்களுக்கு இந்த நடைமுறையையும், கோவில் அலுவலக முகவரியையும் தெரியப்படுத்தினால், திருப்பதி பெருமாளின் ஆசியுடன், கல்யாண பத்திரிக்கையை சுவாமிக்கு சமர்ப்பித்த நிம்மதியும் கிடைக்கும்.

### திருமலையில் அங்கப்பிரதட்சனம்

இதே போன்று திருப்பதியில் அங்கப்பிரதட்சனம் செய்ய நிறைய பக்தர்கள் விரும்புவார்கள்.

ஆனால், இதற்கான நடைமுறைப் பற்றி தெரியாமல் விழிப்பார்கள். இதுபோன்ற பக்தர்களுக்கு உதவுவதற்கான வழிமுறையும் உள்ளது.

அங்கப்பிரதட்சனம் செய்ய விரும்பும் பக்தர்கள், அங்கபிரதட்சனம் செய்வதற்கு முதல் நாள், நண்பகல் 12 மணியிலிருந்து விஜயா பாங்கில் டிக்கெட் கிடைக்கும், இதை கோவில் அலுவலர்களே கொடுப்பார்கள், இதிலும் ஒரு கட்டுப்பாடு உள்ளது.

ஒருநாளைக்கு மொத்தம் 750 டிக்கெட் மட்டுமே வழங்கப்படும், பெண்கள் 350 ஆண்கள் 400 மட்டுமே வழங்கப்பட்டது. தற்போது இதுகுறித்த தகவலை விஜயா வங்கியில் விசாரிக்கலாம். இந்த அங்கப்பிரதட்சனம் செய்வதற்கு எந்தவித கட்டணமும் கிடையாது. முற்றிலும் இலவசமாகவே கோவில் நிர்வாகம் இந்த வசதியை செய்து கொடுக்கிறது.






# இருதய கோளாறு தீர்க்கும் காப்பு மந்திரம்

தற்காலத்தில் நோய்கள் பல பெருகிவருகிறது, இதில் குறிப்பாக இருதய நோய் மனித குலத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது, இருதய இரத்த நாளங்களில் அடைப்பு போன்றவைகளும் மக்களை வாட்டி வதைக்கும் இந்த நேரத்தில், இருதயம் சம்பந்தப்பட்ட நோய்களை போக்கவும், இருதயம், இரத்த நாளங்களை பாதுகாக்கவும் நம் முன்னோர் பல்வேறு காப்பு மந்திரங்களை உருவாக்கிவைத்துள்ளனர்.

அக்காலத்தில் இருதய நோய் என்பது இல்லாமல் இருந்தாலும், வருங்காலத்தில் இது ஒரு கொடிய பிரச்சனையாக மக்களை வாட்டி வதைக்கும் என்பதை அறிந்தே இந்த இருதய காப்பு மந்திரங்களை நமது முன்னோர் தயாரித்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் ஒருசில காப்புகளை ஒருசில கோவில்களுக்கு சென்று பிரார்த்தித்தால் நல்ல பலன் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது. அது குறித்து எளிமையாக ஒரு கண்ணோட்டத்தை பார்ப்போம்...

### இருதயக் காப்பு மந்திரம்:

அங்காதங்கால் லோம்னோ லோம்னோ
ஜாதம் பர்வணி பர்வணி
யக்ஷ்மம் ஸர்வஸ் மாதாத் மனஸ்தமிதம்
விவ்ருஹாமி தே
ஓம் சாந்தி சாந்தி சாந்திஹி

### இதயக் கவசத் துதி தமிழில்:

இருதய ஆகாசம் ஈரெட்டு
நாளப் புடைக் கழிய மாதவத்து
வருதல் சிவபோதம் வந்துரைக்கப் பணித்
தலையர் வார்த்த மாவரம்
மருதல மாமரத்துறை மந்தார மாமறையர்
செருத்த வளித் துறையாம்
சுருதல மாமுனியும்
இருதய ஈசத்தில் எழுந்த பதங் கண்டேன்.

## இருதய பிரச்சனை தீர வழி 1

திருச்சி கரூர் இடையே பெருகமணி ரயில் நிலையத்திலிருந்து நங்கவரம் செல்லும் பாதையில் இரண்டு கி.மீ. தொலைவில் உள்ளதே பழையூர் சிவாலயம். பெருகமணி என்னும் தொன்மை வாய்ந்த திருத்தலத்தில் உள்ளதே பழையூர்.

இறைவன் ஸ்ரீஅகத்தீஸ்வரர். இறைவி ஸ்ரீஆனந்தவல்லி அம்மன்.

இதயத்தைக் காக்கும் துதியான

இருதய ஆகாசம் ஈரெட்டு
நாளப் புடைக் கழிய மாதவத்து
வருதல் சிவபோதம் வந்துரைக்கப் பணித்
தலையர் வார்த்த மாவரம்
மருதல மாமரத்துறை மந்தார மாமறையர்
செருத்த வளித் துறையாம்
சுருதல மாமுனியும் இருதய ஈசத்தில் எழுந்த
பதங் கண்டேன்

இத்தலத்தில் 16 முறை ஓதி 16 முறை வலம் வந்து வணங்குவதால் இதய நோய்கள் அகலும்.

## இருதய பிரச்சனை தீர வழி 2

திருச்சி திருவானைக்கோயில் பிரகாரத்தில் உள்ள எட்டுத் திக்கு கொடி மரங்களுக்குச் சுத்தமான 16 பசு நெய் தீபங்களை ஏற்றி வழிபட்டு வருதலால் இதய இரத்தக் குழாய்களில் உள்ள அடைப்புகள், வீக்கம் நீங்கி சுகமடைவர்.

புதன் தோறும் ஸ்ரீ வாயிலார் நாயனார் சன்னதியில் அரிசி மாவினால் கோலமிட்டு இருதய நோய் நிவர்த்திக்காக பிரார்த்தனை செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

### தேவமொழி இருதயக் காப்பு மந்திரம்

அங்காதங்கால் லோம்னோ லோம்னோ
ஜாதம் பர்வணி பர்வணி
யக்ஷ்மம் ஸர்வஸ் மாதாத் மனஸ்தமிதம்
விவ்ருஹாமி தே

**இதயக் கவசத் துதி தமிழில்**

இருதய ஆகாசம் ஈரெட்டு
நாளப் புடைக் கழிய மாதவத்து
வருதல் சிவபோதம் வந்துரைக்கப் பணித்
தலையர் வார்த்த மாவரம்
மருதல மாமரத்துறை மந்தார மாமறையர்
செருத்த வளித் துறையாம்
சுருதல மாமுனியும்
இருதய ஈசத்தில் எழுந்த பதங் கண்டேன்.

## இருதய பிரச்சனை தீர வழி 3




திருச்சி மணப்பாறையில் உள்ள ஸ்ரீஅகத்தீஸ் வரர் திருத்தலம் ஸ்ரீயந்திரம் பொலியும் அற்புத தலமாகும்.

ஸ்ரீஅகத்திய பெரு மானால் ஸ்ரீதன யோக முறையில் ஸ்ரீயந்திரம் பொலியும் அற்புதத் தலம் இதுவே.

கடுமையான இதய நோய்கள், சர்க்கரை வியாதி களால் துன் புறுவோர் அருகம்புல் ஒரு கைப்பிடி அளவு தங்கள் கைகளில் ஏந்தி இத்தலத் தை 21 முறை வலம் வந்து தல விருட்சத்திலோ, ஏதாவது பால் விருட்சங்களிலோ ஓடும் நதிகளி லோ விட்டு விட வேண்டும். இதனால் கடுமையான நோய்களிலிருந்து எளிதில் நிவாரணம் கிட்டும்.

பூரணமான நிவாரணம் கிட்டும் வரை வழி பாட்டைத் தொடர்ந்து நிறைவேற்றி வர வேண்டும் என்பது முக்கியம்.

## இருதய பிரச்சனை தீர வழி 4

இதய நோயால் துன்பப்படுவோர் ஒவ்வொரு திருவாதிரை நட்சத்திரத் தன்றும் கொடிமரத்திற்கு முன்னும் பின்னும் நந்தி உள்ள சிவன் கோயில் களில் இறைவனை நம்பி வாழும் ஏழைகளுக்கு சர்க்கரைப் பொங்கல், வடை தானம் செய்து, வழி பட்டு வந்தால், நோய் குணமாகி நலம் பெறுவர்.


புனிதவேல்

மேலும், அவர்கள் கண்பார்வை இல்லாதோருக் குத் தங்களால் இயன்ற சேவை, உதவிகளை அவ்வப்போது செய்து வந்தால் நோயிலிருந்து பூரண குணம் பெறலாம்.

விழி இழந்தோருக்குச் செய்யும் சேவையே, இதய நோய்களுக்கு அற்புதமான மருந்து.

## இருதய பிரச்சனை தீர வழி 5

ஒவ்வொரு கோயிலிலும் பல்வேறு இடங்களில் ஜீவசமாதி கொண்டுள்ள சித்தர்கள் பல வகை யான முறைகளில் மக்களுக்கு அருள் புரிந்து வருகின்றனர்.

அந்த வகையில்

"சென்னை திருநின்றவூர் ஹிருதயாலீஸ்வரர் ஆலயத்தில் உள்ள "அக்னி புராந்தக மகரிஷி" முதுகு வடத்தில் உள்ள நோய்களையும்,

சென்னை சித்துக்காடு தாந்திரீஸ்வரர் சிவால யத்தில் நந்தி மண்டபத்தில் நந்திக்கு வலது பக்கத்தில் உள்ள "பிராண தீபிகா சித்தர்" இரு தய நோய்களையும்,

சென்னை திருக்கச்சூர் தியாகராஜ சுவாமி ஆலயத்தில் உள்ள "அக்னி கச்ச சித்தர்" அல்சர், பெப்டிக் அல்சர் (Ulcer, Peptic Ulcer) போன்ற வயிற்று உபாதைகளையும் தீர்க் கும் வல்லமை பெற்றவர்கள்.

## இருதய பிரச்சனை தீர வழி 6

வியாழக்கிழமை தோறும் காலையில் அருகம்புல் சாற்றுடன் தேன் கலந்து ஸ்ரீ ஆதி விநாயகருக்கு நிவேதனம் செய்து பின்னர் அந்த பிரசாதத்தை காலையில் வெறும் வயிற்றில் உண்டு வந்திடில் இருதய சம்மந்தமான நோய்கள் தடுக்கப்படும்.

## இருதய பிரச்சனை தீர வழி 7

கடுமையான தோல் வியாதிகள், T.B. மற்றும் இருதய நோய்கள் உள்ளோர் பவ கரண நேரத்தில் "இந்திராக்ஷி கவசம்" என்னும் அற்புதமான மந்திரத்தை ஓதி, தேய்பிறை பவகரண நேரத்தில் ஏழைகளுக்குப் பட்டு வஸ்திரங்களையும் புதுத் துணிகளையும் தானமாக அளித்து வருவதால் நெடுங்காலமாக இருக்கும் நோய்களுக்குத் தக்க நிவாரணம் கிடைக்கும்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572

# அம்பாளுக்கு பாதி பாகத்தை தருவதாக
# வாக்கு தந்த சிவஸ்தலம்




சிவபெருமானின் பாடல் பெற்ற தலங்களில், மலை மீது இருக்கும் கோவில்கள் மிகக்குறைவு. அவற்றில் திருச்சி மாவட்டம் காவிரி வடகரைத் தலமான ஈங்கோய்மலை ஒன்று...

அகத்தியர் ஈ உருவத்தில் இறைவனை வழிபட்டதால் ஈங்கோய்மலை என்று பெயர் வந்தது. அம்பாள் இறைவனை வழிபட்ட இடமாதலின் சிவசக்திமலை என்றும் பெயருண்டு.

சிவன், தன் உடலின் இடப்பாகத்தை தருவதாக உமைக்கு உறுதியளித்த தலம்..!

சிவபெருமான தவம் செய்த பெருமையும்கொண்டது. தவம் செய்த ஈசன் ஈ வடிவில் மலர்களில் இருந்த தேனை ஸ்வீகரிதுக் கொண்டதாலும் ஈங்கோய்மலை என்று பெயர் வந்திருக்கலாம்..!

மூலவர் மரகதாலேஸ்வரர் மரகதம் போன்று பச்சை நிறத்தில் மரகதத்தால் ஆன சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். இதனால் இவருக்கு மரகதாசலேஸ்வரர் என்ற திருநாமமும் உண்டு.

சிவபெருமானின் சந்நிதியில் உள்ள தீபம் காற்று பட்டாலும் அசையாத கொழுந்துடன் விளங்குகிறது. அதனால் சுவாமிக்கு அசல ஈசுவரர் என்ற பெயரும் உண்டு.

சிவராத்திரி நாளின் முன்பின் நாட்களில் சூரிய ஒளி இறைவன் மீது படும் சமயம் லிங்கம் பல வண்ணத்தில் காட்சி அளிக்கிறது..!

காலைக் கடம்பர், மத்தியான சொக்கர், அந்தி திருவேங்கிநாதர் எனும் கூற்றுப்படி, ஒரேநாளில் காலையில் கடம்பவனேஸ்வரரையும், மதியம் அய்யர்மலையிலுள்ள ரத்தினகிரீஸ்வரரையும், மாலையில் திருஈங்கோய்மலை மரகதாஜலேஸ் வரரையும் ஒரே நாளில் நடந்து சென்று தரிசித்தால் 108 சிவாலயங்களை தரிசித்த பயன் நிச்சயம் உண்டு.






கார்த்திகை மாதத்து திங்கட் கிழமைகளில் வழிபடுதல் மிகவும் விஷேசம்.

தினந்தோறும் காலை 10 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 430 மணி முதல் 6 மணி வரையிலும் இத்திருக்கோவில் திறந்திருக்கும்.

ஐநூறு படிகளுடன் அமைந்த மலைக்கோயில்... மலை ஏறும் படிகள் சுமாராக அமைந்திருப்பதாலும், வழியில் இளைப்பாற ஒரேஒரு மண்டபத்தைத் தவிர வேறு வசதி இல்லாததாலும், சற்றே சிரமம் தருகிறது.

மலை அடிவாரத்தில் கொங்கு நாட்டுத் தலங்க ளுக்கே உரித்தான கல் விளக்குத் தூண் காணப்படுகிறது. அடிவாரத்தில் போக முனிவர் சந்நிதி உண்டு, கோயிலுள் தட்சிணாமூர்த்தி, விநாயகர், சுப்பிர மணியர் சந்நிதிகள் உள்ளன.

வலமாக வரும்போது கோயிலின் விசாலமான பழைமையான திறந்தவெளி அமைப்பைக் காண முடிகிறது. அம்பாளுக்கும் சுவாமிக்கும் தனித் தனியே கோயில் விமானங்கள், கொடிமரங்கள் உள்ளன. திருமணத்தடை, குழந்தை பாக்கியம், கல்வியில் சிறந்து விளங்க இறைவனை பிரார்த் திக்கலாம்.

அம்பாளுக்கு, சிவன் தன் இடப்பாகம் தர உறுதி தந்த மலை என்பதால் இம்மலையை "சக்திமலை' என்கின்றனர். இதனை உணர்த்தும் விதமாக முன்மண்டபத்திலும், மலையிலும் அர்த்தநாரீஸ்வரர் வடிவங்கள் உள்ளன.

மரகதாம்பிகை, நின்ற கோலத்தில் இருக்கிறாள். இவளது கருவறை விமானம், கோபுரம் போன்ற அமைப்பில் மூன்று கலசங்களுடன் இருக்கிறது.

கருவறை சுற்றுப்பிரஹாரத்தில் மகிஷா சுரனை வதம் செய்த துர்க்கை காலுக்கு கீழே மகிஷனுடனும், மற்றொரு துர்க்கை சாந்த சொரூபியாகவும் உள்ளனர். ஒரே இடத்தில் துர்க் கையின் இரண்டு வடிவங்களையும் காண்பது அரிதான ஒன்று தென்திசை வந்த அகத்தியர், சிவனை வழிபட வந்தபோது நடை அடைக்கப்பட்டுவிட்டது.னக்கு காட்சி தரும்படி சிவனை வேண்டினார்.

மலை அடிவாரத்தில் உள்ள தீர்த்தத்தில் நீராடி விட்டு வந்தால் தன்னை வணங்கலாம் என்று அசரீரி சொன்னதன்படி அகத்தியர் தீர்த்தத்தில் நீராடியபோது, ஈ வடிவம் பெற்று மலை மீது பறந்து வந்து, சன்னதி கதவின் சாவித்துவாரம் வழியாக உள்ளே புகுந்து சுவாமியை தரிசனம் செய்தார்.

பின் மீண்டும் தன் பழைய வடிவம் பெற்று திரும்பினார்.




அகத்தியர் ஈ வடிவில் வழிபட்ட தலம் என்ப தால், "திருஈங்கோய்மலை' என்றும், சிவனுக்கு "ஈங் கோய்நாதர்' என்றும் பெயர் உண்டு. சிவனுக்கு தீபாராதனை காட்டும்போது லிங் கத்தில் ஜோதி ஜொலிப்பதைக் காணலாம்.

தைப்பூசத்தன்றுசுவாமி, அம்பாளுடன் காவிரிக்கரையில் எழுந்தருளு கிறார். ஆடிக் கிருத்திகை மற்றும் பவுர்ணமி நாட்களில் கிரி வலம் செல்கின்றனர்.

பிரகாரத்தில் ஒரு தட்சிணாமூர்த்தி, விமானத் தில் வீணை தட்சிணாமூர்த்தி, கால்களை மாற்றி அமர்ந்த தட்சிணாமூர்த்தி என வித்தியாசமான வடிவங்களில் குரு பகவானை தரிசிக்கலாம்.

ஆதிசேஷனும் வாயுவும் தத்தம் வல்லமையை நிலை நாட்டிட கடும் போரில் ஈடுபட்ட சமயம், ஆதிசேஷனால் முழுவதுமாக மூடப்பட்டிருந்த மேரு மலையிலிருந்து வைரம், சிவப்பு மணி, மரகதம், மாணிக்கம் மற்றும் நீலம் ஆகியவை சிதறி விழுந்தன.

அவ்வாறு மரகதம் வீழ்ந்த இடமே திரு ஈங்கோயில் என்பர். இதன் காரணமாகவே இங் குள்ள மூலவர் மரகதாலேசுவரர் ஆனார்.

சிவபெருமான், அவர்களைச் சமாதானம் செய்து, மலையிலேயே மரகதலிங்கமாக எழுந் தருளினார்.

மரகத அசலத்தில் (மலையில்) எழுந்தருளியவர் என்பதால், "மரக தாசலேஸ்வரர்' என்ற பெயர் பெற்றார். இவருக்கு "திரணத் ஜோதீஸ்வரர்' என்ற பெயரும் உண்டு.



கீதா–ராஜன்

தொகுப்பு: கீதாராஜன்
தொடர்பு எண்: 9444228203

# அன்னாபிஷேகத்தை ஏற்கும் திருப்போரூர் முருகப்பெருமான்

ஓம் என்பதற்க்கு பிரணவம் என்று பொருள், பிரணவம் என்றால் முடிவில்லாதது என்று கூறு வார்கள்.

இந்த ஓம் என்பதை வைத்து தான் மந்திரம் தொடங்கப்படுகிறது ஏனென்றால் இதுதான் பிர பஞ்சத்தின் சாவி இதை உச்சரித்து கூறும்போது அந்த சொல் வலிமை அடைகிறது.

பிரபஞ்சத்தில் இருந்து வரும் சப்தமும், பூமி சுத்தும் போது எழும்பும் ஒலி அலைகள் ஓம் என்ற சப்தத்தை பெற்றிருக்கிறது. இது தான் பிரபஞ்சத்தையே இயக்குகிறது. மும்மூர்த்திகளை படைத்த பராசக்தி ஓம்காரத்தில் இருந்து தோன் றினால் என்று வரலாறு கூறுகிறது.

மேலும் பிரம்மா ஓம் காரத்தை வைத்து தான் உலக ஜீவன்களை படைக்கிறார். சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றியதால் முருகனை சிவ அம்சமாக வழிபடுவர்.

பிரணவ மந்திர பொருள் தெரியாத பிரம்மா வை சிறையிலடைத்தபோது, முருகனே படைப்புத் தொழில் செய்தார். இதனால் இவரை பிரம்மாவின் அம்சமாகவும் வழிபடுவதுண்டு. திருச்செந்தூர் போன்ற தலங்களில் விழாக்காலங்களில் முருகப் பெருமான், மும்மூர்த்திகளின் அலங்காரத்தில் எழுந்தருளுவார். அதேபோல் திருப்போரூர் திருத்தலத்தில், கந்தசுவாமி, மும்மூர்த்திகளின் அம்சமாகவே தினந்தோறும் காட்சி தருகிறார்.

கோயிலுக்கு அருகிலுள்ள குன்றில் கைலாச நாதர், பாலாம்பிகை அம்பாள் கோயில் உள்ளது. இவ்வாறு மலையில் சிவனும், அடிவாரத்தில் முருகனுமாக அமைந்த அற்புதமான திருத்தலம் இது ! முன்பு, முருகன் சிலை மட்டும் இருந்தது. பின்னர் வள்ளி, தெய்வானையை பிரதிஷ்டை செய்தனர். முருகன் சுயம்புவாகத் தோன்றியவர் என்பதால் அபிஷேகம் இல்லை. புனுகு மட்டும் சாத்துகின்றனர்.

சிவாலயங்களில் அம்பாளுக்கும் பெருமாள் கோயில்களில் தாயாருக்கும் நவராத்திரி விழா சிறப்புற நடைபெறும். உமையவளின் மருமகள் களான வள்ளி தெய்வானைக்கும் நவராத்திரி விழா நடைபெறுகிறது. இந்த நாட்களில் வள்ளி, தெய்வானைக்கு ஒன்பது விதமான அலங்காரம் செய்யப்படும்.

அதேபோல் சிவனாரைப் போல ஐப்பசி பௌர்ணமியில் முருகப்பெருமானுக்கு இங்கே அன்னாபிஷேகமும், சிவராத்திரி நாளில், இரவில் நான்கு கால பூஜையும் விமரிசையாக நடக்கிறது. இங்குள்ள அம்பிகை புண்ணியகாரணியம்மன் எனப்படுகிறாள்.



# 27 நட்சத்திரத்திற்குரிய திருக்கோவில்கள்

www.aanmeegamalar.com



ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு ராசிக்கும் ஒரு திருத்தலங்கள் இருக்கும் இந்ததிருத்தலங் களில் வீற்றிருக்கும் இறை வனை வழிபட்டால், அந்த ராசிக்குரிய பலன்களை பெறலாம், அதே நேரம் ராசி மட்டுமின்றி ஜோதிடத்தில் நட்சத்திரத் திற்கும் முக்கியத்துவம் தரப்படுவதால், அந்த அந்த நட்சத்திரத்திற்கு என்று ஒரு சிறப்பு திருத்தலங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

அப்படி அந்த திருத்தலங்களைசென்று வழிபட்டால், நட்சத்திரத்தால் வரவிருக்கும் தீமைகள் நம்மை அண்டாமல் காக்கப் படுவோம், இவ்வாறு ஒவ்வொரு நட்சத்திரத்திற் குரிய மற்றும் நட்சத்திரத்திற்கு உரிய திருத்தலங் களைப் பற்றி பார்ப்போம்.

**அஸ்வினி:** முக்கிய ஸ்தலம் கூத்தனூர்

மற்ற தலங்கள்: ஸ்ரீரங்கம், திருத்துறைபூண்டி, கொல்லிமலை.

**பரணி:** முக்கிய ஸ்தலம்: நல்லாடை

மற்ற தலங்கள்: திருநெல்லிக்கா, கீழப்பறையார், பழனி, பட்டீஸ்வரம், திருத்தங்கல், திருவாஞ் சியம்.

**கார்த்திகை:** முக்கிய ஸ்தலம் கஞ் சானகரம்

மற்ற தலங்கள்: காஞ்சிபுரம், திருப்புகலூர், கீரனூர், திருச்செந்தூர், திருவொற்றியூர், கானாட்டுமுள்ளூர்.

**ரோஹிணி:** முக்கிய ஸ்தலம் திருக்கண்ண மங்கை

மற்ற தலங்கள்: காஞ்சிபுரம், திருவானைக்கோவில், ஜம்பை, கழுகுமலை, செம்பாக்கம், கொரட்டூர், நெல்லிச்சேரி, மன்னார்குடி, பெருமாள் அகரம், திருவரங்கம், திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி.

**மிருகசீரிடம்:** முக்கிய ஸ்தலம் எண்கண்

மற்ற தலங்கள்: அம்பர் மாகாளம், ஒசூர், முசிறி, தாழமங்கை.

**திருவாதிரை:** முக்கிய ஸ்தலம் சேங்காலிபுரம்

மற்ற தலங்கள்: சிதம்பரம், அதிராம்பட்டினம்.

**புனர்பூசம்:** முக்கிய ஸ்தலம் சீர்காழி

மற்ற தலங்கள்: பழைய வாணியம்பாடி,திரு வள்ளூர், திருநெல்வேலி, திருப்பாசூர், திருவெண்ணெய்நல்லூர்.




**பூசம்: முக்கிய ஸ்தலம் திருச்சேறை**

மற்ற தலங்கள்: விளங்குளம், ஒழுந்தியாபட்டு, ஆவூர், கோனேரிராஜபுரம், பரிதிநியமம், திருச்சுழி, அழகர் கோயில்.

**ஆயில்யம்: முக்கிய ஸ்தலம் திருப்புறம்பியம்**

மற்ற தலங்கள்: திருந்துதேவன்குடி, நண்டான் கோயில், சங்கரன்கோயில், திருப்புனவாசல், புள்ளபூதக்குடி, திருவிடந்தை.

**மகம்: முக்கிய ஸ்தலம் திருவெண்காடு**

மற்ற தலங்கள்: திருக்கச்சூர், திருவரத்துறை, கீழப்பழுவூர், ஆலம்பொழில், அன்பில், திருவாலங்காடு.

**பூரம்: முக்கிய ஸ்தலம் தலைசங்காடு**

மற்ற தலங்கள்: நாலூர், கஞ்சனூர், திருவரங்குளம், புரசைவாக்கம்.

**உத்திரம்: முக்கிய ஸ்தலம் கரவீரம்**

மற்ற தலங்கள்: காஞ்சிபுரம், திருவக்கரை, செய்யூர், கூவத்தூர், மயிலாடுதுறை, இடையாற்று மங்கலம்.

**ஹஸ்தம்: முக்கிய ஸ்தலம் கோமல்**

மற்ற தலங்கள்: தர்மபுரி, செய்யாறு, புவனகிரி, ஏமப்பூர், எழிலூர், திருவாதவூர், திருவேற்காடு.

**சித்திரை: முக்கிய ஸ்தலம் திருவையாறு**

மற்ற தலங்கள்: அண்ணன்கோயில், தாடிக்கொம்பு, திருநாரயணபுரம், நாச்சியார் கோயில், திருவல்லம், திருவக்கரை, திருக்கோயிலூர், திருமாற்பேறு.

**சுவாதி: முக்கிய ஸ்தலம் திருவிடைமருதூர்**

மற்ற தலங்கள்: திருப்புடைமருதூர், பெரியதிருக்கோணம், கடத்தூர், பிள்ளையார்பட்டி, நயினார் கோயில், ஸ்ரீரங்கம்.

**விசாகம்: முக்கிய ஸ்தலம் கபிஸ்தலம்**

மற்ற தலங்கள்: திருமலைக்கோயில், அத்தாள நல்லூர், தீயத்தூர், திருநன்றியூர், நத்தம்.

**அனுஷம்: முக்கிய ஸ்தலம் நாச்சியார் கோயில்**

மற்ற தலங்கள்: திருவொற்றியூர், திருவண்ணாமலை, திருப்புனவாசல், திருக்கண்ணமங்கை, நீடூர், திருநன்றியூர்.

**கேட்டை: முக்கிய ஸ்தலம் வழுவூர்**

மற்ற தலங்கள்: பிச்சாண்டார் கோயில், பசுபதி கோயில், பல்லடம், திருப்பராய்த்துறை.

**மூலம்: முக்கிய ஸ்தலம் மயிலாடுதுறை**

மற்ற தலங்கள்: மாந்துறை, ஆச்சாள்புரம், பாமணி, கோயிலூர், குலசேகரப்பட்டினம், பொழிச்சலூர், மம்பேடு.

**பூராடம்: முக்கிய ஸ்தலம் கடுவெளி**

மற்ற தலங்கள்: நகர், சிதம்பரம், இரும்பை மகாகாளம்.

**உத்திராடம்: முக்கிய ஸ்தலம் இன்னம்பூர்**

மற்ற தலங்கள்: கோயம்பேடு, காங்கேய நல்லூர், பேளூர், கீழ்பூங்குடி, திருப்பூவனூர், திருக்கடிக்குளம், திருப்பூவணம், திருக்கோஷ்டியூர், திருக்குற்றாலம்.

**திருவோணம்: முக்கிய ஸ்தலம் திருவிடைமருதூர்.**

மற்ற தலங்கள்: ராஜேந்திரப்பட்டினம், திருமுல்லைவாயில், திருப்பாற்கடல்.

**அவிட்டம்: முக்கிய ஸ்தலம் திருபூந்துருத்தி**

மற்ற தலங்கள்: விருதாச்சலம், திருவான்மியூர், திருக்காட்டுப்பள்ளி, திருகொள்ளிக்காடு, திருமறைக்காடு, கொடுமுடி.

**சதயம்: முக்கிய ஸ்தலம் திருப்புகலூர்**

மற்ற தலங்கள்: கடம்பனூர், கோயில் கடம்பனூர், ஆதி கடம்பனூர், இளங்கடம்பனூர், வாழிக்கடம்பனூர், பெருங்கடம்பனூர், கடம்பர் கோயில், மேலக்கடம்பூர் , பிச்சாண்டார் கோயில், மதுரை.

**பூரட்டாதி: முக்கிய ஸ்தலம் திருக்குவளை**

மற்ற தலங்கள்: ரெங்கநாதபுரம்.

**உத்திரட்டாதி: முக்கிய ஸ்தலம் திருநாங் கூர்.**

மற்ற தலங்கள்: தீயாத்தூர், வைத்தீஸ்வரன் கோயில்.

**ரேவதி: முக்கிய ஸ்தலம் இலுப்பைப்பட்டு**

மற்ற தலங்கள்: காருகுடி, இரும்பை மாகாளம், திருச்செங்கோடு.







# அண்டம் முதல் பிண்டம் வரை வியாபித்து இருக்கும் வாயுபகவான்

நம்முடைய உடலாகிய பிண்டத்தை மட்டுமல்ல ஒட்டுமொத்த அண்டத்திலும் வியாபித்து நிற்பது வாயு பகவான்தான், இந்த வாயு பகவானுக்கு தமிழில் அதிகப்படியான பெயர்கள் உள்ளன.

வாதம், கால், வளி, மருந்து, வாடை, பவனம், வாயு, கூதிர், மாருதம், மால், கோதை, கொண்டல், உலவவை, கோடை, ஊதை, வங்கூழ், ஒலி, சதாகதி, உயிர்ப்பு, அரி, கந்தவாகன், பிரபஞ்சனன், சலனன், தென்றி, மலயக்கால், வசந்தன், சிறுகால், சாரிகை, சூறை, வடந்தை என்ற பெயர்களோடு அறிமுகப் படுத்துகின்றது. இவை அனைத்தும் காற்றின் வேறு பெயர்களாக தொல்காப்பியம், நிகண்டு, நன்னூலில் சொல்லப்படுகின்றது.

நவீன அறிவியலில் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு மேலே போனால் காற்று பத்தாது என்பதெல்லாம் அவ்வளவாக உண்மையில்லை.

யானையை பார்க்காத குருடன் யானை என்ற ஒன்று இல்லை என்று கூறுவது போல ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு பின் இருக்கும் காற்றை கண்டுபிடிக்கும் அளவுமுறையை இன்றைய அறிவியல் கண்டு பிடிக்க இயலாததால், குறிப்பிட்ட தூரத்திற்கு பின் காற்று இல்லை என்று கூறுகிறது. உலகம் மற்றுமின்றி ஆகாயத்திலும் நிறைந் திருக்கும் காற்றினை முழுவதுமாக ஆராய்ந்தால் பல்வேறு மர்மங்கள் விலகும், ஆனால் அந்த ஆய்வுக்குரிய வகையில் நமது நவீன விஞ்ஞானம் இன்னும் முன்னேறவில்லை.

எதை எதையோ அறிவியல் மூலம் படைக்கும் மனிதன், எந்த உயிரினத்தின் மூலக்கூறுகள்

இல்லாமல் ஒரு உயிரினத்தை படைக்கும் அறிவியலை இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

இதற்கு காரணம், அந்த உயிரினம் இயற்கையாக சுவாசிக்கும் காற்று சம்பந்தப்பட்ட உறுப்புகளின் தோற்றமும், உறுப்புகள் காற்றை பயன்படுத்தும் டெக்னாலஜி குறித்த அறிவும் மனித விஞ்ஞானத்திற்குள் அடங்கவில்லை என்பதால்தான், இன்னும் மூலக்கூறு பயன்படுத்தாத விஞ்ஞானம் தோன்றாமல் இருப்பதற்கு காரணமாகும்.

இதில் நமது உடலில் இயங்கும் காற்று மண்டத்திற்கு நம் முன்னோர் பல்வேறு பெயர்களை வைத்துள்ளனர். இதில் முக்கியமானது தசவாயுக்கள், இந்த தசவாயுக்கள் நமது பிண்டமாகிய உடலில் வேலை செய்யும் விபரத்தை பார்ப்போம்.

## தசவாயுக்கள்

| |
|---|
| **1. பிராணன்:** |
| மூலாதாரத்தை சேர்ந்து மேல் நோக்கி இதயத்தில் நின்று நாசியில் சென்று திரும்பி அலையும்படி செய்யும். |
| **2. அபானன்:** |
| குதத்தை பற்றி நின்று ஜாடராக்கினியாய் உஷ்ணத்தை உண்டாக்கி , உண்ட அன்ன பானாதிகளை ஜீரணிக்க செய்யும். |
| **3. வியானன்:** |
| சர்வாங்கமும் வியாபித்து இருந்து பொருத்திடங்கள் எல்லாம் களைப்பும் தவனமும் உண்டாகசெய்யும். |
| **4. சமானன்:** www.aanmeegamalar.com |
| சரீரத்தின் நடுவான நாபிஸ்த்தானத்தில் நின்று ஜீரணித்த அன்னபானாதிகளை உதிர மாக்கி ரத்த நாடிகளின் வழியாக இழுத்து சென்று சமமாக பரவி தேகத்தை வளர்க்கும். |
| **5. உதானன்:** |
| கண்டஸ்தானத்தில் நின்று சத்ததோடே கலந்து குரலோசை செய்ய ,பேசக்கூடிய காரியத் தை செய்யும். |
| **6. நாகன்:** |
| வாயில் இருந்து வாந்தி செய்விக்கும். |
| **7. கூர்மன்:** |
| கண் ரப்பையில் இருந்து விளிக்கசெய்யும். |
| **8. கிரிதரன்:** |
| மூக்கில் நின்று குறுகுறுத்து தும்மல் உண்டாக்கும். |
| **9. தேவதத்தன்:** |
| மார்பில் நின்று கபத்தை சேர்த்து நெட்டி, கொட்டாவி, விக்கல் உண்டாக்கும். |
| **10. தனஞ்செயன்:** |
| பிராணன் நீங்கின பிறகும் 3 நாட்கள் மட்டும் இருந்து சரீரம் வீங்கி வெடித்து போவான், அக்னி யில் சுடும்போது அப்போதே போய்விடும். இதனாலே தகனம் செய்ய சொல்கின்றனர் (ஞானியர் உடல் தவிர) |

இதே வாயு அண்டமாகிய பிரபஞ்சத்தில் வியாபித்து ஏழு பிரிவாக நிற்கின்றது.

| | |
|---|---|
| 1.ஆவஹம்: | மேகம் முதலியவற்றை நடத்துவது. |
| 2.ப்ரவஹம்: | சூர்யமண்டலத்தை நடத்துவது. |
| 3.ஸம்வஹம்: | சந்திரமண்டலத்தை நடத்துவது. |
| 4.உத்வஹம்: | நக்ஷத்திரங்களை நடத்துவது. |
| 5.விவஹம்: | செவ்வாய் முதலான கிரகங்களை நடத்துவது. |
| 6.பரிவஹம்: | ஆகாசகங்கையும் சப்தரிஷிகளையும் வழி நடத்துவது. |
| 7.பராவஹம்: | துருவ மண்டலத்தை வழி நடத்துவது. |

www.aanmeegamalar.com

அண்டம் முதல் பிண்டம் வரை காற்றுதான்.... இவை அனைத்திற்க்கும் வாயுவே அடிப்படை...

அண்டம் முதல் பிண்டம் வரை வியாபித்திருக்கும் வாயுவை நாம் மூச்சு பயிற்சி மூலம் கட்டுப்படுத்தினால் அண்டத்தில் உள்ள விடை தெரியாத கேள்விகளுக்கும் விடை கிடைக்கும்.

இதனை நமது முனிவர்கள், ஞானிகள் சரியாக பயன்படுத்திதான், ஆகாய மார்க்கமாக பறப்பது போன்றவற்றை எளிமையாக செய்து வந்தனர். இந்த வாயு பயிற்சியை மேற்கொண்டோமானால், நாம் வாழ்க்கையை மட்டுமல்ல நமது இறப்பையும் நாமே தீர்மானித்துக் கொள்ளலாம். முனிவர்கள் ஜீவ சமாதி நிலைக்கு செல்வதற்கு இந்த வாயு பயிற்சியை பயன்படுத்தினர், மேலும் இதை சரியான முறையில் கையாண்டால் கொடிய நோய்களையும் எளிதாக விரட்டிவிடலாம்.

இனியாவது தினமும் சிலநிமிடங்கள் வாயுவை கட்டுப்படுத்தும், யோகம், தியானம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தருவோம்.

# நோய் வராமல் தடுக்கும் சித்தர்




## நோய் வந்தால் காப்பீடு திட்டம் கை கொடுக்கு

## நோயே வராமல் தடுக்க இந்த சித்தர் வழிபாடு கைகொடுக்கும்

மருத்துவத்துறையில் புதிய புதியதாக பல்வேறு நோய்கள் தோன்றி மக்களை பெரும்பாடு படுத்தும் இந்த வேளையில் மருத்துவக்காப்பீடு என்பதை மக்கள் அதிகமாக நாடி செல்கின்றனர்.

நோய் வந்தபின் இந்த காப்பீடுத்திட்டத்தின் மூலம் எளிதாக மருத்துவம் பெறலாம் என்ற காரணத்தால், குடும்பம் முழுவதும் காப்பீடு செய்து வருகின்றனர்.

இதைப்போன்றே ஆன்மிகத்தில் நோய் வருவதற்கு முன்பே அந்த நோய் நம்மை பெரிதாக தாக்காமலும், நோய் வராமலும் தடுக்கும் வழிபாட்டு முறை ஒன்று உள்ளது.

நோய் வந்த பின் இறைவனை வழிபட்டு நோய் நீங்க பல்வேறு பிராயச்சித்தங்கள் செய்வதைப்போன்று, நோய் வருவதற்கு முன்பே ஒரு சித்தரை வழிபட்டால் வரவிருக்கும் நோய் நம்மை அண்டாமல் விலகிவிடும்.

மற்ற சித்தர்களைப் போன்று இல்லாமல், இந்த சித்தர் மிக வித்தியாசமாக சிந்தித்தார். "நோய்வந்து இறைவனை வழிபடுவதற்கு முன்பே, நோய் வராமல் தடுக்கும் இறை சக்தி எது" என்று பலகாலமாக சிந்தித்து, ஆராய்ந்தார், சிவனின் அருளால் அதற்கான லிங்க வழிபாட்டையும், நோய்வராமல் மக்களை பாதுகாக்கும் சக்தியையும் பெற்றவர்தான் ஸ்ரீஅவதூது ரோக நிவர்த்தீஸ்வரர்.

பெரும்பாலும் இந்த சித்தரைப் பற்றி அதிகளவில் வெளியில் தெரியாமலே உள்ளது. இவரின் மகத்துவத்தையும், இவர் முக்தியடைந்த ஸ்தலத்தைப் பற்றியும் பார்ப்போம்.

சென்னை பூந்தமல்லியிலுள்ள ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவிலின் மஹிமை பலரும் அறியாதது. நூற்றுக்கணக்கான சித்தர்கள்




இக்கோயிலின் தூண்களிலும், மாடங்களிலும், மேற்கூரைகளிலும் ஜீவ சமாதி பூண்டுள்ளனர்.

ஸ்ரீஆதிசங்கரர் இத்திருக் கோயிலுக்கு விஜயம் செய்து அண்ட சராசரங்களிலும் காண இயலாத இரண்டு யந்திரங்களைத் (சக்கர வடிவில்) தம் திருக்கரங்களால் பிரதிஷ்டை செய்துள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை அருகிலுள்ள ஸ்ரீவைதீஸ்வரன் கோயிலின் பூரண அம்சங்களைத் தாங்கி அதற்கு ஈடான முத்துக்குமார ஸ்வாமியாகத் திருமுருகன் அருள் பாலிக்கும் தலம் இது.

தஞ்சை ஸ்ரீவைதீஸ்வரன் கோயில் மூல ஸ்தலம் என்றும், சென்னை, பூந்தமல்லியில் உள்ளது பிம்ப ஸ்தலம் என்றும் சித்தர்கள் கூறுவார்கள்.

இங்குள்ள மூர்த்திகள் மூல வைத்தீஸ்வரன் கோயிலில் உள்ளவை போன்றே அமைந்து 'இரண்டும் ஒன்றே' என்று சித்தர்களால் பெருமை பாடும் அற்புதச் சிறப்பைத் பெற்றுள்ளன.

இத்திருக்கோயிலில் பல ஆன்மீக ரகசியங்கள் பொதிந்துள்ளன. ஸ்ரீதையல் நாயகி அன்னையின் சன்னதிக்கு எதிரில், ஸ்ரீஆஞ்சநேய மூர்த்தி தரிசனம் தரும் தூணின் பின்புறன் "ஸ்ரீ அவதூது ரோக நிவர்த்தீஸ்வரர்" என்ற சித்தர் ஜீவ சமாதி கொண்டு அருள் பாலிக்கின்றார்.

இவருடைய விசேஷத் தன்மை என்னவெனில் இவர் எந்த நோயிலிருந்தும் ஒருவர் தன்னைத் தற்காத்துக் கொள்ள அருள் புரியும் அற்புத சித்தர்.

உதாரணமாக ஒருவருக்கு அம்மை நோய் பற்றும் அறிகுறி தென்படின் ஸ்ரீஅவதூது ரோக நிவர்த்தீஸ்வரரைத் தரிசித்து, இயன்ற அளவு நீர்மோர், இளநீர், குளிர்பானம், மிளகு சாதம் போன்றவற்றைத் தானமாக ஏழைகளுக்கு வழங்கி தன்னை அந்நோயினின்று தற்காத்துக் கொள்ளலாம்.

ஒரு குழந்தைக்குப் போலியோ தாக்கும் அறிகுறி ஏற்படின், இச்சித்தரைத் தரிசனம் செய்து இயன்ற அளவு ஊனமுற்றோர்க்குச் சக்கரப் பலகை, ஊன்று கோல், சக்கரவண்டி, செயற்கை கால் போன்றவற்றைத் தானமாக வழங்கி அக்குழந்தையைப் போலியோ நோயினின்று காத்துக் கொள்ளலாம்.

இவ்வாறாக எந்த நோய்க்கான அறிகுறி தென்பட்டாலும் அதற்குரிய வழிமுறைகளுடன் கூடிய இந்தச் சித்தர் பெருமானின் தரிசனம் செய்தால், அந்த நோயிலிருந்து எளிதாக






நிவர்த்தியடையலாம்.

நோய் கண்டபின் அருள் பாலிக்கும் தெய்வங்கள், தெய்வ சன்னதிகள் பற்றி அறிந்துள்ளோம். ஆனால் நோய் வரும்முன் காக்கும் ஸ்ரீரோக நிவர்த்தீஸ்வரரின் அருள் தன்மை மருத்துவத் துறைக்கே ஒரு சவாலாகும்.

## அம்மகானுக்கு இப்படிப்பட்ட சக்தி எப்படி வந்தது?

பல்லாயிரம் வருடங்களுக்கு முன் ‘நோய்களைத் தீர்ப்பதற்கு ஈசனுடைய பல லிங்க வடிவங்கள் இருப்பினும் நோய்கள் வரும்முன் காக்கும் லிங்க வடிவைக் கண்டு அருள் பெற்று, பிறவிப்பிணி நீக்க உதவ வேண்டும்’, என்று விருப்பம் கொண்டார் ஓர் உத்தமர்.

அவர் அத்தகைய லிங்கேஸ்வரரைத் தேடி பல யுகங்கள் அலைந்தவராய் முடிவில் இறையருளால் இமயமலைச் சாரலிலே “ரோகேஸ்வரர்” லிங்கத்தைக் கண்டார்.

அன்னாரே தாம் தேடிய பொக்கிஷம் என்பதை ஈசனுடைய அசரீரி ஒலியால் உணர்ந்தார். பிறகு அவ்விடத்தில் இருந்து கொண்டு பல திருப்பணிகள் இயற்றி நோய் தடுக்கும் ரகசியங்களை ஈசனருளால் உணர்ந்து கொண்டார்.

இறைவனிடம், “ஐயனே! அடியேனெங்கிருந்து கொண்டு மக்களுக்கு உதவ வேண்டும்?” என்று கேட்க ஈசனும், “நீ எந்தத் தலத்தில் அவதூதாக மாறுகின்றனையோ அங்கு குடிகொண்டு மக்களுக்கு அருள் பாலிப்பாயாக!” என்று அருளினான்.

அவ்வாக்கின்படியே அந்த உத்தமர் அனைத்து உத்தமத் தலங்களையும் தரிசித்தவராக முடிவில் பூவிருந்த வல்லியை அடைந்து வைதீஸ்வரனைத் தரிசித்த வேளையிலேயே அவதூதாக மாறினார்.

பின் ஈசனுடைய விருப்பப்படி அங்கேயே சமாதி கொண்டு விட்டார். அந்த மகா முனிவர் தான் ஸ்ரீஅவதூது ரோக நிவர்த்தீஸ்வரர்.

**நோய் இருப்பவர்கள்தான் இந்த சித்தரை வணங்கி பலன் பெற வேண்டும் என்பதில்லை, ஆரோக்கியமாக இருப்பவர்கள் தொடர்ந்த இந்த சித்தரை வழிபட்டால் பிற்காலத்தில் வரவிருக்கும் நோய்களும் வீரியம் இல்லாமல் சாதாரண எளிய உபாதையாக மாறிவிடும்.**

# பதவி உயர்வு, பணி மாற்றம் தரும்

# கொங்கணகிரி முருகன்

பாலமரத்து குச்சியை நாம் இன்றும் நல்ல காரியங்கள் துவங்கும்போது பிரதானமாக பயன்படுத்துகிறோம். திருமணத்தின்போது முகூர்த்தக்கால் நடுவதற்கும்,வீடு, புதிய கட்ட டங்கள் கட்டும்போது பாலக்கால் போடுவதற்கும் பாலமரத்து குச்சியைப் பயன்படுத்துகிறோம். தீய சக்திகள் அண்டாமல் காக்கும் பாலமரத்து குச்சி தெய்வீக சக்தியுடையது என பெரியோர்கள் கூறுவார்கள்.

தூக்கநாயக்கன்பாளையத்தில் அற்புத சக்தி நிறைந்த பாலமரம் எண்ணற்றவை உள்ள மலை மீது சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் ஆடு, மாடுகள் மேய்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு வரது காராம் பசு மட்டும் மலை உச்சியில் உள்ள ஒரு பாலமரத்தின் அடியில் நின்று கொண்டு இருந்துள்ளது.

புற்களை மேயாமல் பாலமரத்தின் அடியில் அடிக்கடி இந்த காராம் பசு ஏன் நிற்கிறது என்ற சந்தேகம் மாடு மேய்ப்பவருக்கு எழ, ஒரு நாள் அருகில் சென்று பார்த்துள்ளார். அப்போது பாலமரத்தின் அடியில் சுயம்பு மூர்த்தம் போல் உள்ள கல்லின் மீது அந்த காராம் பசு தானாக பால் சொரிவதைப் பார்த்து சிறிது கோபத்துடன் அதனை அதட்டியும், தன் கையில் உள்ள கம்பால் அடிக்க முற்படும் போது, அசரீரியாய் "ஓம்" என்ற குரல் ஒலித்துள்ளது.

அப்போதுதான் அந்த மலையின் மீது முருகப்பெருமான் குடிகொண்டுள்ளார் என்பதை அறிந்து நடந்த சம்பவத்தை ஊர் பெரியவர்களிடம் கூறியுள்ளார்.

பின்னர் பச்சை பந்தல் போட்டு வழிபடத் துவங்கியுள்ளனர். பின்னர் நாளடைவில் கருவறை அமைத்து வழிபட்டுள்ளனர். போகரின் சீடரான கொங்கணர் சித்தர் சில காலம் இந்த மலையில் தங்கி முருகப்பெருமானை வழிபாடு செய்ததால் இந்த மலையை கொங்கணகிரி என அழைக்கின்றனர்.

பிற்காலங்களில் வந்து வேண்டியவர்களின் வேண்டுதல்கள் நிறைவேற, ஆலயத்தை விரிவுபடுத்தி முருகப்பெருமானுக்கு சிலை வடித்து பிரதிஷ்டை செய்து கொங்கணகிரி சித்தர் இம் மலையில் தங்கியிருந்ததை நினைவு கூறும் விதமாக மூலவரின் திருநாமத்தின் முன்பு கொங்கணகிரி என சேர்த்து கொங்கணகிரி குமார சுப்பிரமணிய சுவாமி என திருநாமம் சூட்டி வழிபட்டனர்.

பாண்டிய மன்னர்கள் ஆட்சிக்காலத்திலும், திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்திலும் இந்த ஆலயத்தின் திருப்பணிகள் நடந்ததாக கூறப்படுகிறது. மகா மண்டபத்தின் மேல் பகுதியில் உள்ள கருங்கற்களில் மீன் சின்னங்களும் முதலை சின்னமும் உள்ளன. பிற்காலத்தில் சின்னாறு மகன் மூத்தாண்டன் என்பவரும் ஆலய திருப்பணிக்கு உதவி செய்ததாக ஒரு தூணில் குறிப்பு காணப்படுகிறது.

சுமார் 134 படிகள் உள்ள மலை மீது செல்ல தார் சாலை வசதியும் உள்ளது. அடிவாரத்தில் உள்ள பாத விநாயகர் மேற்கு நோக்கி



www.aanmeegamalar.com




அருள்கிறார். இவரை தரிசித்த பின்னர் படியேறத் துவங்கினால் பாதி மலையைத் தாண்டியதும் இடும்பக்குமரன் சக்திகிரி, சிவகிரியை காவடியில் சுமந்த கோலத்தில் வடக்கு நோக்கி காட்சி தருகிறார்.

பின்னர் மலைக்கோயிலை அடையும் முன்னர் கீழ் பகுதியில் பழமைமிகுந்த பெரிய வேல் ஒன்றும் அதன் இரு புறமும் நாகர் திருமேனிகள் காட்சி தருகின்றன. அதன் முன்புறம் பெரிய பலிபீடமும் உள்ளது. இங்கு தரிசித்த பின் ஒரு சில படியேறினால் மூலவர் குடிகொண்டுள்ள மலைக் கோயில் உள்ளது. தார் சாலையில் வருபவர்கள் மலைக்கோயில் முன் உள்ள வலம்புரி விநாயகரை தரிசிக்கலாம்.

மூலவர் குடிகொண்டுள்ள ஆலயத்தின் முன் தீபஸ்தம்பம் உள்ளது. வசந்த மண்டபத்தில் மயில் வாகனம், பலிபீடம் உள்ளது. மகாமண்டபத்தினுள் நுழையும் முன் சுதை வடிவில் ஒரு பக்கம் வீரபாகு மற்றொரு பக்கம் வீர மகேந்திரன் துவாரகபாலர்களாக காட்சி தருகின் றனர். மகா மண்டபத்தை அடுத்துள்ள அர்த்த மண்டபத்தில் மஹா கணபதியும், கையில் தண்டத்தை ஏந்தியவாறு ஞான தண்டாயுதபாணியும் அருள்கின்றனர். கருவறையில் மேற்கு நோக்கி கொங்கணகிரி குமார சுப்பிரமணிய சுவாமி அழகே உருவாக அருள்பாலிக்கிறார். வலது கையில் சக்திவேல், இடது கையில் வஜ்ரவேல் சாற்றப்பட்டுள்ளது.


செ.சு.சரவணகுமார்

இத்தலத்தில் உள்ள குமார சுப்பிரமணிய சுவாமியை வேண்டி இப்பகுதியில் உள்ள அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் பலர் பதவியுயர்வு அடைந்துள்ளனராம். அதே போல் விருப்பப்பட்ட இடத்திற்கு பணி மாறுதல் வேண்டி இவரை வணங்கி விரும்பிய இடம் பெற்றவர்கள் ஏராளம் எனவும்,திருமணத்தடை உள்ளவர்கள் இவரை வேண்டினால் தடை நீக்கி சுபமுகூர்த்த வரம் நல்கும் சுவாமி எனவும் பக்தர்கள் போற்றுகின்றனர். இத்தல பக்தர்கள்.

கல்வி வரம் வேண்டுவோர் இங்கு அருள்பாலிக்கும் மூலவருக்கும்,அர்த்த மண்டபத்தில் குடிகொண்டுவேண்டிடு வோருக்கு ஞானத்தை அள்ளித்தந்து அருள்பாலிக்கும் ஞான தண்டாயுத பாணிக்கும் விசேஷ பூஜைகள் செய்து கல்வியில் சிறந்து விளங்கு கின்றனராம். கோஷ்டத்தில் கிழக்கு







நோக்கி நர்த்தன கணபதி,வடக்கு நோக்கி துர்க்கை, தெற்கு நோக்கி தட்சிணாமூர்த்தி ஆகியோர் அருள்பாலிக்கின்றனர். அர்த்தமண்டபத்தின் வெளிப்பகுதியில் அறுபடை வீடுகளில் குடிகொண் டுள்ள முருகப்பெருமானின் அமைப்பு சுதை வடிவில் உள்ளது.

முருகப்பெருமானுக்கு சத்ரு சம்ஹார திரிசதி அர்ச்சனை மிகவும் விசேஷமானது. நமது வாழ்க்கையில் சத்ருக்களால் ஏற்படும் உபாதைகள் நீங்க சத்ரு சம்ஹார திரிசதி அர்ச்சனை செய்து வழிபட்டால் நிவர்த்தி கிடைக்கும். இத்தலத்தில் ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் சத்ரு சம்ஹார திரிசதி அர்ச்சனை செய்யப்படுகிறது.

வெளிச்சுற்றில் ஆதி விநாயகர், காசி விசாலாட்சி உடனமர் காசி விஸ்வநாதர் ஆகிய தெய்வங்கள் தனித்தனி சந்நிதிகளில் குடிகொண்டு அருள்பாலிக்கின்றனர். சண்டிகேஸ்வரர், சனீ ஸ்வரர், நவநாயகர்கள் தரிசனமும் இத்தலத்தில் கிடைக்கின்றன. தலவிருட்சம் பாலமரம். குழந்தை வரம் வேண்டுவோர் இத்தல முருகப்பெருமானை வேண்டிய பின்னர் தலவிருட்சமான பாலமரத்தில் தொட்டில் கட்டி பிரார்த்தனை செய்திட குழந்தை வரம் கிட்டும் என்பது நம்பிக்கை.

ஆடிக்கிருத்திகை நாளில் கணபதி ஹோமம், சுப்பிரமணிய மூல மந்திர ஜெப ஹோமம் முடிந்து மதியம் 108 சங்காபிஷேகம் செய்யப்பட்டு விசேஷ வழிபாடு நடைபெறுகிறது. இப்பூஜையில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தங்கள் வாழ்வு சிறக்க பிரார்த்திக்கின்றனர். அமாவாசை, கிருத்திகை,வளர்பிறை சஷ்டி, பிரதோஷம் ஆகிய விரத தினங்களில் இத்தலத்தில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறது.

வைகாசி விசாக நாளில் இத்தல மூலவருக்கு மதியம் விசேஷ அபிஷேக பூஜை மற்றும் சிறப்பு அலங்காரம் முடிந்து தீபாராதனை நடைபெறுகிறது.

வைகாசி இரண்டாவது வாரம் செவ்வாய்க் கிழமை நாளில் சத்ரு சம்ஹார திரிசதி ஹோமம் முடிந்து கொங்கணகிரி குமார சுப்பிரமணிய சுவாமிக்கு அபிஷேக, அலங்கார ஆராதனை நடைபெற்ற பின்னர் சிறப்பு அர்ச்சனை செய்யப்படுகிறது. இந்த வழிபாட்டில் கலந்து கொண்டால் எதிரி தொல்லை நீங்கி தொழில் முன்னேற்றம் ஏற்படும்.நினைத்த நற்காரியங்கள் கைகூடும் என்பது நம்பிக்கை.

பங்குனி உத்திரம்,தைப்பூசம் ஆகிய வருட விழாக்களும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. வேண்டிடும் பக்தர்களின் துயர் நீக்கி சிறப்பான வரங்களைத் தந்தருளும் தூக்கநாயக்கன்பாளையம் கொங்கணகிரி குமார சுப்பிரமணிய சுவாமியை நீங்களும் ஒரு முறை வந்து வழிபட்டு செல்லுங்கள்.

**திருக்கோயில் அமைவிடம்:**

ஈரோடு மாவட்டம்,சத்தியமங்கலம் அத்தாணி சாலையில் தூக்கநாயக்கன்பாளையம் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி, 2 கி.மீ கொங்கர்பாளையம் சாலையில் நடந்தால் மலைக்கோயிலை அடையலாம்.தூக்கநாயக்கன்பாளையத்திலிருந்து ஆட்டோ, கால்டாக்சி வசதி உள்ளது.

– சென்னி வீரம்பாளையம்
செ.சு.சரவணகுமார்
தொடர்புக்கு: 93458 88883

ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று
ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்–ஆப்,
இ–புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

## இதுவரை 130 இதழ்களை கடந்துள்ளோம்.

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**
Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# உலகம் முழுவதும் பரவியிருந்த சக்தி வழிபாடு

அன்னை வழிபாடு ஆதிகாலம் தொட்டே இருக்கிறது என முன்பே சொன்னேன். அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என சிலர் கேட்கலாம். ஏன் என்றால் இப்போதெல்லாம் உப்பு இருந்தால் தான் திண்பண்டம் தொப்பையில் இறங்குவது போல் ஆதாரமென்று எதையாவது காட்டினால் தான் விஷயம் மண்டைக்குள் இறங்குகிறது. இன்னும் சிலர் இருக்கிறார்கள் தொன்மையானதாக, பழமையானதாக இருந்தால் மட்டும் போதுமா? அது மட்டுமே ஒன்றிற்கு சிறப்பை சேர்க்குமா? வயதானது எல்லாம் பயனுடையது என்றால் கிழவர்கள் அனைவருமே புத்திசாலிகளாகவும், பொதுசேவகர்களாகவும் இருக்க வேண்டுமே, நிதர்சனம் அதுவல்ல நேற்று கண்டுபிடித்த மருந்து நோயை உடனடியாக குணப்படுத்துகிறது என்றால் ஆண்டாண்டு காலமாக பயன்படுத்திய மருந்தை தள்ளி வைக்கலாம், அதில் தவறில்லை என்கிறார்கள்.

எல்லாவற்றிற்குமே ஆதாரம் வேண்டும், அத்தாட்சி வேண்டுமென்றால் குழந்தையை தூக்கி முத்தமிடுவதற்கு கூட மரபு சான்றிதழ் வேண்டும். நம்பிக்கை என்பது சுத்தமாக படுத்து விட்டால் வாழ்க்கை முழுவதும் துன்பமயமாகிவிடும் மனைவி நம் மேல் அன்பு வைப்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது. நாம் விற்கின்ற வரை சொத்து நம் பேரில் தான் இருக்கும் என்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? புற்றுநோய் வந்து சாகமாட்டோம் என்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது. என ஒவ்வொன்றிற்கும் ஆதாரம் வேண்டும் என தேடிக்கொண்டே போனால் நிம்மதியாக ஒரு பிடி சாதம் சாப்பிட முடியாது. நீட்டி படுத்து தூங்க முடியாது. எல்லாவற்றையும் இல்லையென்றாலும் எதையாவது சிலவற்றையாவது அம்மா சொன்னாள், பாட்டனாரின் தகப்பனார் எழுதி வைத்திருக்கிறார் என்று நம்ப வேண்டும், நம்பிக்கைதான் நிஜமாகவே நம்மை இயங்க வைக்கும் சக்தியாக இருக்கிறது அவநம்பிக்கை பல நேரம் துயரத்தைதான் தருகிறது.

அதே போல புதுமை என்பது அவசியமானதுதான். புறாவில் செய்தி அனுப்பிய காலம் போய் செல்போன் பேசுகின்ற காலத்தை உருவாக்கியது



கடவுள் உருவாக்கிய மதம்




புதுமை கண்டுபிடிப்புகள் தான். அதற்காக பழமையை ஒதுக்க வேண்டிய முற்றிலும் அழிக்க வேண்டிய அவசியமில்லை. அது சரியாகவும் இருக்காது.

பழமையோ புதுமையோ மனிதனுக்கு மனதிலும், உடம்பிலும் இதத்தை தர வேண்டும். அதே நேரம் மற்ற ஜீவன்களுக்கு தொல்லை தராமல் இருக்கு வேண்டும். அப்போது தான் உலகத்தில் அமைதி நிலவும் ஆனால் துரதிஷ்டவசமாகபுதுமை என்று சொல்ல கூடியபல விஷயங்கள் தொல்லை தருவதாக இருக்கிறது அதனால்தான் பழமையின் சிறப்பை பேச வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

தாய் தெய்வ வழிபாடு என்பது பழமையானதுஎன சொல்லி பெருமைஅடைய வேண்டிய சூழல் உருவாகி யுள்ளது.

கருணையே வடிவான கடவுளை பெண்ணாகவழிபடுவது சிறப்பான காரியம்தான் ஆனால் பெண் கடவுள் என வரும் போது மதிக்கப்படுகிறாள் நிஜபெண்ணாக வரும் போது மிதிக்கபடுவதுதானே நடைமுறை உலகில் காணப் படுகிறது. கல்வியின் கடவுளாக சரஸ்வதி தேவியை வழிபடுகிறோம். அதே கல்வியை பெண்கள்சர்வ சுதந்திரமாக படிக்க அனுமதிக்கிறோமா?

நாகரிகம் வளர்ந்துவிட்ட இந்த காலத்தில் பெண்கள் இந்த துறையில் படிக்ககூடாது அந்த துறையை தொட்டு கூட பார்க்க கூடாது என ஆயிரம் கட்டுதிட்டங்கள் வைத்து இருக்கின்றோம்.

அதையும் மீறி சிலபெண்கள் படித்துவிட்டால் அவளுக்கு திமிரை பார், படித்துவிட்டோம் என்ற கர்வத்தில் தலைகால் புரியாமல் குதிக்கிறாள் என சாடுகிறோம். செல்வத்தின் அதிபதியும் மகாலஷ்மி என்ற பெண் தெய்வம் தான் ஆனால் இன்று உலகத்தில் நிதி ஆதாரத்தில் நிறைவு பெற்ற பெண்மணிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். சொந்தமாக பெண் சம்பாதித்தாலும் கூட அவள் பணத்திற்கு அவள் முதலாளி அல்ல, அதே போல வீரத்தின் கருப்பொருளாக எடுத்துகாட்டுவது அன்னை ஆதிபராசக்தியை ஆனால் இன்றைய பெண்களின் வீரம்இன்று எந்தளவு மழுங்கடிக்கப்பட்டு இருக்கிறது என்பது உலகறிந்த சங்கதி ஒரு காலத்தில் வாள் எடுத்து போர் புரிந்த பெண்ணினம் இன்றுதெரு வோர பைப்படியில் குடுமிபிடி சண்டை போடுமளவுக்கு தரம் குறைந்து போய் விட்டது இங்கு பூமி பெண், இயற்கை பெண் நதியும்பெண்,மொழியும் பெண் கடவுள் கூட பெண் தான்.

ஆனால் நிஜமான பெண் சுதந்திரம் பறிக்கப்பட்டு அடிமையாகி பலி பீடத்தில் கழுத்து நெறிக்கப்பட்டு கிடத்தப்பட்டு கிடக்கிறாள்.

இதற்கு யார் காரணம் என்று ஆராய்வது பெரிய வேலை. ஆனால் சுலபமான சுருக்கமான விடை நமக்கு தெரியும். ஆதிக்க மனபான்மை தான் மூலக்காரணம். இந்த ஆதிக்க மனோபாவம் மனிதனிடம் தொற்றி மதத்தையும் பிடித்தபோது தான் தாய் தெய்வ வழிபாடு உச்ச நிலையில் இருந்து கீழே இறக்கப்பட்டது. மாதர்களின் மாண்பும் மதிப் பிழந்து போய்விட்டது.

நமது இந்தியாவில் சக்திவழிபாடு சிறப்புற்று இருந்த காலத்தில் பெண்கள் தேசத்தின்நிஜமானகண்களாகவே மதிக்கப்பட்டார்கள். ஆதிக்க மனோபாவம் மேலோங்கிய காலத்தில் தான் சக்தி வழிபாட்டில் உள்ள வாமசாரபூஜை முறைகளை முன்னிலைப்படுத்தி காட்டி அவமரியாதை செய்யப்பட்டு அது இரண்டாம் தர வழிப் பாட்டு முறையாக பின்னுக்கு தள்ளப்பட்டது.

சிவன் உட்பட மும்மூர்த்திகளையும் படைத்து ஆதிபராசக்தியாக ஓங்கி நின்ற தாய் தெய்வம் மும்மூர்த்திகளின் நாயகிகளாக படியிறக்கப்பட்ட பிறகே மகளிருக்கான அடக்கு முறைகள் பெருக் கெடுத்தது என்பதற்கு வரலாற்று

“

**கிறிஸ்தவம் எப்படி அன்னை பாரசக்தியை அன்னை மரியாளாக ஏற்று கொண்டதோ அதே போலவே இந்து மதத்தை எதிர்த்து பிறந்த பௌத்த மதமும் அன்னை சாரதாதேவியை அன்னை தாராதேவியாக போற்றி வணங்குகிறது இந்த நிலையை ஜைன மதத்திலும் காணலாம் சினாவின் தாவோயிஷம், கன்பூஷியம், போன்ற மதங்களிலும் அன்னை வழிபாட்டு முறையானது பகிரங்கமாகவே நடத்தப்படுகிறது**

சான்றுகள் பல இருக்கிறது அவை களை பற்றியெல்லாம் வேறொரு முறை விரிவாக பார்ப்போம். இப்போது சக்தி வழிபாட்டின் சிறப்புகளை ஆராய முற்படுவோம்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

அன்னை ஆதிபராசக்தியை உலக மாதாவாக வணங்கும் முறை நமது இந்திய துணைகண்டத்தில் சிந்து வெளி நாகரிக காலத்திற்கு முன்பே இருந்திருக்கிறது இருந்தாலும் சிந்துவெளி காலத்தில் அந்த வழிபாட்டு முறையானது மிக உச்சமான நிலையை அடைந்திருக்கிறது மொகஞ் சதரோ, ஹரப்பா ஆகிய பகுதிகளில் அகழ் ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட அன்னையின் மண் சிலைகளின் வயது சுமார் ஆராயிரம் வருடங் களாகும் இந்த ஒரு ஆதாரத்தை வைத்தே சக்தி வழிப்பாட்டின் தொன்மைகாலத்தை நாம் கணித்துவிடலாம்.

இதே போலவே பாரசீகம்,ஏஜியன், மெசபட் டோமியா, பிரான்ஸ், காஸ் பியா, பாலஸ்தீனம், சைப்பிரஸ், கீரிஸ், எகிப்து, துருக்கி போன்ற தேசங் களிலும் ஆதிபாராசக்தியின் வழிபாடு கொடிகட்டி பறந்திருக்கிறது இதை படித்தவுடன் சிலருக்கு ஒரு யோசனை வரும் ஆதிகால மனிதன் எங்கெல்லாம் வாழ்ந்தானோ அங்கெல்லாம் கடவுளைப் பெண்ணாக வழிபட்டு இருக்கலாம் அந்த பிரேதேசங்களில் கிடைக்கின்ற ஆதாரங்கள் அக்கூற்றை மெய்ப்பிக்கவும் செய்யலாம்.

ஆனால் அதை வைத்து பெண் கடவுள்கள் வழிபாடு எல்லாமே இந்து மத சாயலுடைய பராசக்தி வழிபாடு என சொல்வது எந்த வகையில் பொருத்தமாக இருக்கும் எனத் தோன்றலாம். அப்படி சிந்திப்ப வர்களுக்கு தக்க பதிலை தர வேண் டிய நமது கடமையாகும்.

பெண்தெய்வ வழிபாட்டை பாராசக்தி வழிபாடு என ஏன் சொல்கிறேன்என் றால் மேலே நான் சொன்ன நாடு களில் கிடைத்துள்ள பெண் தெய்வ சிலைகளும் ஹரப்பா, மொகஞ் ஜதரோ பகுதிகளில் கிடைத்துள்ள சிலைகளும் அச்சு அசல் ஒன்றாகவே இருக்கிறது இந்தியாவிலிருந்து அந்த வழிபாட்டு முறை அயல்நாடுகளுக்கு சென்றதா அல்லது அயல்நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு வந்ததா என்பது ஆய்வுக்குரிய சங்கதி ஆனாலும் அயல்நாட்டு பெண் தெய்வ வழிபாடும் தம் நாட்டு பெண் தெய்வ வழிபாடும் ஒன்றாக இருப்பதை வைத்து சக்தி வழிபாடு தொன்மையானது மட்டும்மல்ல உலகம் முழுமைக் கும் பொதுமையானது என்பதையும் இங்கு வலியுறுத்தவே மேற்குறிப்பிட்ட கருத்தை வாசகர் முன்னால் வைத்தேன்.

நாட்டின் எல்லைகளை தாண்டி பாராசக்தி வழிபாடு எப்படி உலகமெல்லாம் பரந்துவிரிந்து இருந்ததோ அதே போலவே அது பல மதங்களையும் தொட்டு தன்வயப்படுத்தி தனியாட்சி நடத்தியது என்றே சொல்லவேண்டும். உலகம் முழுவதும் உள்ள பெருவாரியான மக்கள் கிறிஸ்துவ மதத்தை பின்பற்றுபவர்கள் என்று நமக்கு தெரியும் இந்து மதத்தை போலவே கிறிஸ்துவ மதத்திலும் பல உட்பிரிவுகள் உண்டு. ஆதிகாலம் தொட்டு மக்களால் பின்பற்றப்படும். கத்தோலிக்க முறையை


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

மார்டின் லூதர் மாற்றியமைத்து புதிய கிறிஸ்துவ கிளையை உருவாக்கினாலும்கூட அன்னை மரியாளை வழிப்பாட்டுக்குரிய கருப்பொருளாக கொண்டு கத்தோலிக்க கிறிஸ்தவர்களே இன்று வரையில் உலகம் முழுவதும் அதிக எண்ணிக் கையில் இருக்கிறார்கள்

இன்னும் ஒருபடி சொல்லப் போனால் கன்னி மரியாளுக்கு உலக மக்கள் கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தின் இரண்டு சதவீகிதத்தை கூட பைபிள் அவளுக்கு கொடுக்கவில்லை ஆனாலும் அன்னை மரியாளின் வழிபாடு அந்த மதத்தில் பட்டொளி வீசி பறக்கிறது அதற்கு முக்கிய காரணமே பைபிள் அங்கீகாரம் வழங்கவில்லை என்றாலும் அன்னை வழிபாடு மிகப்பழமை காலத்தில் இருந்தே கிரேக்க, ரோமானிய மக்க ளின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து போனதுதான்.

மேலும் பைபிள் சிலைவழிபாட்டை ஏற்றுக்கொள் வது கிடையாது அதே நேரம் ஏசு ஒருவரை தவிர வேறு யாரையும் புனிதர்களாக கருதுவதும் கிடையாது ஆனால் கத்தோலிக்க மதப்பிரிவின் ஜீவ நாடியே சிலை வழிபாடுதான் கத்தோலிக்க தலைமை பீடமான வாடிக்கன் தேவாலயத்திலும் சரி உலகம் முழுவதும் உள்ள திருச்சபைகளிலும் சரி நிருவப்பட்டுள்ள சிலைகளின் எண்ணிக்கை கலை அழகையும் வார்த்தைகளால் சொல்லி மாளாது இந்த மரபை அவர்களுக்கு கொடுத்தது இந்து மதம்தான் என்பதற்கு ஏராளமான ஆதாரங் கள் உள்ளன.

இன்னும் ஒரு முக்கிய விசயத்தையும் இங்கு பதிவு செய்தாக வேண்டும் பிராட்டஸ்டென்ட் மற்றும் பெந்தெகோஸ்தே கிறிஸ்தவர்களிடம் சகிப்பு தன்மையும் மற்றவர்களை அரவணைக்கும் போக்கும் மிக குறைவு அதிலும் குறிப்பாக பெந் தெகோஸ்தே கிறிஸ்தவர்களிடம் கடவுள் பக்தியை விட மதவெறியே மேலோங்கி நிற்கும் ஆனால் கத்தோலிக்க கிறிஸ்துவர்களை ஒரளவு சகிப்புத் தன்மை கொண்டவர்கள் ஞானஸ்நானம் வாங்கினால் தான் மனிதப் பாவங்களை கழுவமுடியும் என்ற முட்டாள்தனமான பிரச்சாரத்தை அவர்களிடம் காணமுடியாது இந்த இயல்பை அவர்கள் தாய் தெய்வ வழிப்பாட்டிலிருந்து பெற்றார்கள் என்று சொன்னால் அது மிகையில்லை.

கிறிஸ்தவம் எப்படி அன்னை பாரசக்தியை அன்னை மரியாளாக ஏற்றுக் கொண்டதோ அதே போலவே இந்து மதத்தை எதிர்த்து பிறந்த பௌத்த மதமும் அன்னை சாரதாதேவியை




அன்னை தாராதேவியாக போற்றி வணங்குகிறது இந்த நிலையை ஜைன மதத்திலும் காணலாம் சினாவின் தாவோயிஷம், கன்பூஷியம், போன்ற மதங்களிலும் அன்னை வழிபாட்டு முறையானது பகிரங்கமாகவே நடத்தப்படுகிறது.

ஒவ்வொரு மதத்திற்குள்ளேயும் உள்விட்டு தகராறு இருப்பது இயற்கையான அம்சம்தான் ஒருவகையில் அத்தகைய தகராறு தான் சமயப் பண்பாட்டை இதுவரை உலகத்தில் நிலைநிறுத்தி வைத்துள்ளது கிறிஸ்தவத்தில் கத்தோலிக்க, பிராட்டஸ்டென்ட் தகராறு, இஸ்லாத்தில் ஷியா ஸன்னி தகராறு, பௌத்தத்தில் மகாயானத், ஷீனயான தகராறு என்பவைகளேல்லாம் உலகம் அறிந்ததுதான் நமது இந்து மதத்தை பற்றி கேட்கவே வேண்டாம் சட்டையை பிடித்து கிழித்து கொள்ளாத நிலை இன்று இருக்கிறது ஆதிகால நிலையை நினைத்தால் நெஞ்சம் பதறுகிறது வைஷ்ணவனின் கண்ணை பறிப்பதும், சைவனை உயிரோடு சூளையில் வைப்பதும் என்று ஏகப்பட்ட ரணகளங்கள் தான் ஆனால் இந்து மதத்திற்குள் நடந்த மூர்க்கமான சண்டைகளை சக்தி வழிபாடு குறைத்தது என்றே சொல்ல வேண்டும்.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**

மேலும் தொடர்பு கொள்ளவும் **போன்: 09442426434**

# எங்கு திரும்பினாலும்
# சிவலிங்கங்கள்

புலிப்பாக்கம் என்கின்ற ஊரில் மலைமீது வியாக்ரபுரீஸ்வரர் என்ற சிவன் கோயில் உள்ளது. மலைமீது உள்ள வியாகரபுரீஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் வீரராஜேந்திரனுடைய கல்வெட்டு (கி.பி.1070) விளக்கெரிக்க வழங்கிய தானத்தை குறிப்பிடுகின்றது. மூன்றாம் இராஜேந்திரனுடைய மூன்று கல்வெட்டுக்கள் விளக்கெரிக்க வழங்கிய கொடைகளையே குறிப்பிடுகின்றன.

கி.பி.1238-ல் நந்த பெருமான் என்பவன் நடராச பெருமானுடைய செப்புப் படிவத்தைசெய்து அளித்துள்ளான். கி.பி.1242 ல் தொண்டை மண்டலப்பிள்ளை என்பவர் பொன்மாளிகை உடையார் திருமாளிகையில் ஆட்கொண்ட தேவர் சிலை அமைத்து 10 கழஞ்சு பொன் அளித்துள்ளார்.

விஜயகண்ட கோபாலன் ஆட்சியின் போது புலிப்பாக்கம் மத்தியஸ்தனும் கனகராயனும் கோயிலில் விளக்குகள் எரிக்க ஏற்பாடு செய்துள்ளனர். பிள்ளையார் முதலி என்பவர் துர்கை கோஷ்ட தெய்வத்தை எழுநதளிவித்துள்ளார்.

கி.பி.1275-ல் திருமுக்கூடலைச் சேர்ந்த உவச்சன் ஒருவன் வழிபாட்டிற்கு கொடைஅளித்துள்ளான். சோழர் காலத்தில் சேரகோன் முனையதரையன் என்ற அதிகாரி கோயிலில் நீரை தேக்க வேண்டி கல்தொட்டி ஒன்றை ஏற்படுத்தி அந்த தொட்டிலின் விளிம்பில் தன்பெயரை பொறித்துள்ளான். 63 நாயன்மார்களில் ஒருவரான கீரக நாயன்மாரின் சந்ததியினர் வழிவந்த இராமலிங்க முதலியார் மகன் கோயிலினை பழுதுபார்த்து வழிபாடு செய்ய வழிவகை செய்துள்ளான்.

கோயிலில் 19-ஆம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டொன்று கோயிலிலில் திருப்பணி செய்ததை குறிப்பிடுகின்றது. திருவேற்காட்டைச் சேர்ந்த இராமலிங்கன் என்பவரின் மகன் இத் திருப்பணி செய்துள்ளார். இவர் திருவேற்காடு மூர்க்கநாயனார் மரபில் துளுவவுளாளர் சாதியில் வந்தவர் என்று கல்வெட்டு கூறுகின்றது. உமாபதி சிவாச்சாரியார் வேளாளர் மரபில் மூர்க்க நாயனாரைக்குறிப்பிடுவார். வேளாளர் மரபில் துளவ வேளாளர் பிரிவும் ஒன்றாகும். அகம்படி




முதலியார் என இவர்கள் அழைக்கப்படுகின்றார்கள். திருப்பணி புரிந்த இவர் பிரிட்டிஷார் அனுமதியுடன் தமிழ்விளக்கம் மானுட விளக்கம் என்ற நுலை எழுதியதாக கல்வெட்டு கூறுகின்றது.கோயிலில் இருந்த கோஷ்ட தெய்வங்கள் அன்னியர் படையெடுப்பின்போது பின்னப்பட்டதனால் புதியதாக கேஷ்ட தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கோயிலின் அமைவிடம்:

சென்னையில் இருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் பரனூர் டொல்கேட்டினை அடுத்து 700 மீட்டர் தொலைவில் வலதுபக்கம் மலைமீது கோயில் அமைந்துள்ளது இந்த கோயில். மலைமீது செல்ல நல்ல தார் சாலை அமைத்









துள்ளார்கள்.

அனைத்து வாகனங்களும் சுலபமாக செல்லலாம். தரையிலிருந்து சுமார் 100 மீட்டர் உயரத்தில் இந்த மலைக்கோயில் அமைந்துள்ளது. பரபரப்பான நகரச்சூழலில் கோயிலினை நாம் நெருங்குகையில் சூழ்நிலையே நமக்கு மாறிவிடும். நிறைய மரங்கள்அமைத்துள்ளன. கிழக்கு முகம் பார்த்து சிவன் கோயில் அமைந்துள்ளது. சதுர வடிவ கருவரை. கருவரையின் முன் சிலைகள் ஏதும் இல்லை. கருவரை முன்பு தனி மண்டபத்தில் நந்தி தேவர் சிலையும் தரையில் பலிபீடமும் அமைந்துள்ளது.

தெற்கு பக்கம் பார்த்தவாறு அம்மன்நமக்கு காட்சியளிக்கின்றார். அம்மன் பெயர் ஸ்ரீமாங்கல்யம் காத்த நாராயணி அம்பாள் என்பதாகும்.அம்மனுக்கு எதிரே சிங்கமும் பலிபீடமும் அமைந்துள்ளது.கருவரையினை சுற்றி வருகையில் முறையே வினாயகர், தட்சணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, துர்கை சிலைகள் அமைந்துள்ளது.

காலபைரவர் சன்னதி தனியே அமைந்துள்ளது, கோயிலின் எதிரில் சற்று தூரத்தில் நவக்கிரக சன்னதி அமைந்துள்ளது. தியானம் செய்வதற்கு தனியே அரங்கம் உள்ளது. ஸ்ரீவியாக்ரமுனிவர் சித்தர் பீடம் அமைந்துள்ளது. அதில் முனிவர் அமர்ந்தநிலையில் ஆசிர்வதிப்பதுபோல் உள்ளது. காவல் தெய்வங்களுக்கு தனியே கோயில் உள்ளது. அதில் ஸ்ரீவராஹி – பித்ரிங்காதேவி உள்ளிட்ட சிலைகள் உள்ளது. அரசமரத்தின் கீழே நாகசிற்பங்கள் உள்ளது.

கோயிலுக்கு அருகில் பெரிய குளம் அமைந்துள்ளது. கல்வெட்டு இரண்டு கேட்பாறற்று இருக்கின்றது. எங்கும் சிவன் எதிலும் சிவன் என்பதற்கு ஏற்ப இங்குள்ள மலைமீது எங்கு திரும்பினாலும் சிவலிங்கங்கள் காட்சி தரு கின்றது.


வேலன்

மலையிலிருந்து பார்க்கும் சமயம் செங்கல்பட்டு நகரின் தோற்றமும் – செங்கல்பட்டில் உள்ள பெரிய ஏரியான கொளவாய் ஏரியின் தோற்றமும் நம்மை வியப்பில் ஆழ்த்தும். கணவரின் உடல்நிலை சரியில்லாத சமயங்களில் இங்குள்ள அம்மனை சென்று வழிபட்டால் கணவர் பூரண நலம்பெற்று பெண்கள் தாலிபாக்கியம் நிலைபெற்றிடும். ஆலய தொடர்புக்கு: 9443639122..

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

# பேரானந்தத்தைக் காண தியானம் செய்யுங்கள்

மதிப்பிற்குரிய குருதேவர் அருளுகிறார்: “அதிகம் தியானம் செய்யுங்கள். அது எவ்வளவு அற்புதமானது என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். பணம் அல்லது மானிட அன்பு அல்லது நீங்கள் நினைக்கக்கூடிய வேறு எதாவது ஒன்றை நாடுவதில் மணிக்கணக்காக நேரம் செலவிடுவதைவிட தியானம் செய்வது உத்தமமானது. எவ்வளவு அதிகம் நீங்கள் தியானம் செய்கிறீர்களோ, செயலில் ஈடுபட்டிருக்கும் போது எவ்வளவு அதிகம் உங்கள் மனம் ஆன்மீக நிலையில் மையம் கொண்டுள்ளதோ அவ்வளவு அதிகம் உங்களால் புன்னகை புரிய முடியும். நான் எப்பொழுதும் அந்த இறை பேரானந்த உணர்வு நிலையிலேயே இருக்கிறேன். நான் தனியாக இருந்தாலும் சரி அல்லது மக்களுடன் இருந்தாலும் சரி, என்னை எதுவும் பாதிப்பதில்லை. இறைவனின் அந்த ஆனந்தம் எப்பொழுதும் இருக்கிறது. என் புன்னகையை நான் தக்கவைத்துள்ளேன். ஆனால் அதை நிரந்தரமாக வெல்வதற்கு கடின உழைப்பு தேவையாக இருந்தது! அதே புன்னகைகள் உங்களுக்குள் உள்ளன; அதே மகிழ்ச்சியும் ஆன்மாவின் பேரானந்தமும் உள்ளன. நீங்கள் அதை முயன்று பெற வேண்டியதில்லை; மாறாக அவற்றைத் திரும்பப் பெறவேண்டும். புலன்களுடன் உங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டதன் மூலம் நீங்கள் அவற்றை வெறுமனே தாற்காலிகமாக இழந்திருக்கிறீர்கள்”.

“மேலும் அவர் தொடர்கிறார் : “ காணல், கேட்டல், ருசித்தல், முகர்தல், மற்றும் தொடுதல் ஆகிய ஐம்புல நுகர்ச்சிப் பொருட்கள் உங்களுக்கு உன்னதமான ஆனந்தத்தைத் தருமென நீங்கள் எண்ணினால், நீங்கள் பெரும் தவறு செய்கிறீர்கள். அவை அந்த ஆனந்தத்தை அகற்றிவிட மட்டுமே செய்யும். “அந்த முகத்தைப் பார்க்காவிடில் என்னால் சந்தோஷமாக இருக்க முடியாது”. என்றெல்லாம் உங்கள் ஆனந்தத்திற்கு நீங்கள் நிபந்தனைகள் இட்டீர்களானால், உங்களால் கலப்பற்ற ஆனந்தத்தை ஒருபோதும் காண முடியாது. ஏனெனில் புலன்களால் ஏற்படுத்தப்படும் எந்த மகிழ்ச்சியும் நிரந்தரமானதல்ல. காலம் இரக்கமில்லாமல் தேக அழகின்மீது அதன் அழிவை விளைவிக்கிறது. உலகிலுள்ள அனைத்தும் மாற்றத்திற்கு


www.aanmeegamalar.com

126
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

உட்பட்டவை. ஆகவே, உலகிலுள்ள அழகான முகங்கள் அனைத்தையும் உங்களால் பார்க்க முடிந்தாலும் எல்லா இன்னிசைகளையும் நீங்கள் கேட்க முடிந்தாலும், நீங்கள் விரும்பும் ஒவ்வொன்றையும் தொட முடிந்தாலும், அப்போதும்கூட உண்மையான மகிழ்ச்சியை இன்னும் நீங்கள் கண்டிருக்கமாட்டீர்கள். இருந்தாலும் நீங்கள் சந்தோஷமாக இருப்பதாக கற்பனை செய்துகொள்ளலாம். சில நேரங்களில் நீங்கள் விரும்பும் பொருளைத் தோண்டித் தோண்டி முயன்ற பின்பு, அந்தப் பொருளில் இன்பம் இல்லை என்பதைக் காண்கிறீர்கள்; ஆனாலும் அப்பொருளை அடைவதற்காக உங்களது உழைப்பில் ஒருவித மனநிறைவைப் பெறுகிறீர்கள்; ஆகவே நீங்கள் சந்தோஷமாக இருப்பதாக எண்ணுகிறீர்கள். ஆனால் இவ்விதமான மனநிறைவெல்லாம் சொற்ப காலமே நிலைத்திருக்கும்.”



குருப்ரியா

“ஆகவே, புலன்களில் உங்களுடைய மகிழ்ச்சியை தொடாதீர்கள். அகத்துள் ஆனந்தத்தைக் கண்டு அதை உங்கள் முகத்தில் வெளிப்படுத்துங்கள். அதை நீங்கள் செய்யும்போது, நீங்கள் எங்கு சென்றாலும், ஒரு சிறு புன்னகையானது தனது தெய்வீகக் காந்தசக்தியினால் அனைவருக்கும் அதிக சக்தியூட்டுகிறது. அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஆனால் ஒவ்வொரு இதயத்தையும் மாற்றுவது இறைவன்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்; நன்மையைச் செய்யும் சக்தியை நம்முடையதாக என்றும் நாம் கருதவேகூடாது. நன்மையைச் செய்யும் ஒரே ஒருவன் இறைவன்தான். இது அவனது உலகம். இந்த சரீரத்தில் உறைபவன் இறைவன் என நீங்கள் உணர்ந்தால் ஸ்ரீ அதாவது எல்லாவற்றிலும் அவனே செயல்படுகிறான் என்பதை உணர்ந்து, எல்லாவற்றையும் நல்ல மற்றும் தீய செயல்களை ஸ்ரீ அவனிடம் சமர்ப்பித்தால், எவ்வாறு உங்களது அனைத்து செயல்களும் படிப்படியாக நல்லவையாக மாற்றப்பட்டு விடுகின்றன என்பதைக் கண்டு வியப்படைவீர்கள். இறை உணர்வு நிலை உங்களிடம் உள்ளபொழுது, எந்தத் தீயச் செயலையும் நீங்கள் செய்ய இயலாது. உங்களுடைய வாழ்க்கையை அவனுக்கு அர்ப்பணியுங்கள். நீங்கள் செய்யும் எல்லாவற்றின்போதும், “ நீதான்! நானல்ல! நான்ல்ல, இறைவா! எனக்கூறுங்கள். அகந்தையை அழியுங்கள், இந்த விடுதலை அளிக்கும் ஞானத்திற்கு அது ஒரு மிகப்பெரும் தடங்கல். நீங்கள் கர்த்தா அல்ல உங்கள் முகுளத்திலுள்ள (முகுளமையம் அல்லது சக்கரம் உடலினுள் உயிர்சக்தி நுழையும் முதன்மையான இடம்) சிறிய உயிர்க்கதிரை இறைவன் அணைத்துவிட்டால், உங்களால் உங்கள் கரத்தை உயர்த்த முடியுமா?” தியானம் செய்தால்தான் பேரானந்தத்தைக் காணமுடியும் என்று குருதேவர் கூறியுள்ளார். பகவத் கீதையும் அதைத்தான் கூறுகிறது.

யுஞ்ஜன்னேவம் ஸதாத்மானம் யோகீ நியதமானஸ:

சாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம் ஸ்தாமதிகச்சதி.

தியானத்தில் மூழ்கிக்கொண்டிருக்கின்ற யோகி காலக்கிரமத்தில் இறைவனுடன் மிகுந்த அளவு நெருக்கமாகி மோட்சத்திற்கு துல்லியமான சக்தியை அனுபவிப்பார். சாந்தியே இன்பமாகம். கோபம் துக்கத்தை ஏற்படுத்துகிறது. மிகுந்த கோபதாபங்களை உருவாக்குகின்ற உலக வியாபாரங்களிலும் பொருட்களிலும் சாதாரண மக்களின் மனம்சென்றுகொண்டிருக்கின்றன! அவர்கள் எப்பொழுதும் துன்பத்தை அல்லது துயரத்தை மட்டும் அனுபவிக்க நேருகிறது. ஆனால் யோகியின் சித்தம் பரம சாந்தமான ஆத்ம சொரூபத்தில்தான்







மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

எப்பொழுதும் இன்புற்றிருக்கிறது என்பதால் அமிர்தமயமான மோட்ச இன்பத்தை அனுபவிக்கிறார். ஸம்சாரியின் அனுபவம் எப்பொழுதும் துக்கமயமாகிறது என்றால் யோகியின் அனுபவம் எப்பொழுதும் ஆனந்தமுமாகிறது. எனவே தியானம் பரமசாந்தியையும் அதனால் பேரானந்தத்தையும் விளைவிக்கிறது, (பகவத் கீதா அத்.6 ஸ்லோகம்15)

பேரானந்தத்தைக் காண்பதற்கு தியானம் செய்ய வேண்டும். இதுதான் மிக முக்கியமானது. குருதேவர் இதைத்தான் எப்பொழுதும் உறுதிப்படுத்திக் கூறுகிறார். அவருடைய சீடர்களான நாம் அனைவரும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். சீடர்களல்லாதோர்களும் இதைக் கருத்தில் கொண்டு அதற்காக உழைத்தால் நிச்சயமாக அதற்குப் பலன் கிடைக்கும். அவ்வாறு செய்பவர்கள் அல்லது 'தியானம் செய்ய வேண்டும்' என்று ஆழ்மனதில் குறிக்கோளாக நினைப்பவர்களுக்கு அன்பிற்குரிய குருதேவர் அதை சாதித்துத்தருவார். குருதேவர் அவர் களையும் சீடர்களாக ஏற்றுக்கொள்வார் எனப் பொருள். ஏனெனில் தியானத்தைத் தவறின்றி முறையாகக் கற்றுக்கொள்வதற்கு குரு மிகவும் தேவை. குரு கிடைப்பதற்கு பலனை எதிர்பாராமல் நற்காரியங்கள் செய்யவேண்டும். அதற்காக நான் ஓர் உதாரணத்தைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக மனிதராகப் பிறந்த நாம் தினமும் மூன்று வேளை உணவு அருந்துகிறோம். காலை வேளை(8.00 மணிக்கு) உணவு உண்பதற்கு காலை 6.00 மணிக்கு டிஃபன் தயார் செய்ய ஆரம்பிக்க வேண்டும். அதே போன்று மதியம் இரவு வேளைகளுக்காகவும் உணவு உட்கொள்வதற்கு முன்னதாகவே குறைந்தது இரண்டு மணி நேரமாவது அதற்கான வேலைகளைச் செய்தால்தான் குறிப்பிட்ட நேரத்தில் உணவு உண்ண முடியும். உணவு உண்ணும்போது திருப்தியாக உண்ணுகிறோம் அல்லவா! அது பசி வந்த பிறகு உணவு செய்தால் சரியான முறையில் செய்ய முடியாது. முன்கூட்டியே செய்ய வேண்டும். அதுபோலவே நாம் இறை ஸ்ரீ அனுபூதியை அல்லது இறை பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் முன்கூட்டியே (முன்னர் பல பிறவிகளில்கூட தியானம் செய்திருக்கலாம்) தியானம் செய்ய வேண்டும். முற்பிறவியில் செய்திருந்தால் இப்பிறவியில் தானாகவே அந்த எண்ணங்கள் ஏற்படும். "சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்" என்று பழமொழி சொல்வார்கள். அதை நாம் முன்னரே (முற்பிறவியில்) செய்திருந்தால் இப்பிறவியில் அதற்கான எண்ணங்கள் ஏற்பட்டு அதைச் செயல்படுத்த நினைப்போம். இப்பிறவியில் செய்தால் அதை இப்பிறவியிலும் செயல்படுத்தி இறைவனை அடையாலம், அல்லது அடுத்த பிறவியில் அல்லது பின்னர் உள்ள பிறவிகளில் அந்த எண்ணம் ஈடேறும். நல்லதோ தீயதோ, ஒரு பிறவியில் செய்வது நம்மைவிட்டு எங்கேயும் போய்விடாது. அவை நம்முடன்தான் இருக்கும். அவை பின்னருள்ளபிறவிகளில் வெளிப்படும். எனவே குருதேவர் கூறுவதை ஓர் எழுத்துவிடாமல் மனதால் ஏற்றுக்கொண்டு நேரம் கிடைக்கும் போதெல்லாம் தியானம் செய்தால் நம் ஆத்மாவை பரமாத்மாவுடன் சேர்ப்பதற்கு உதவியாக இருக்கும். இதை நாம் அனைவரும் செய்யத்தான்வேண்டும். துன்பமயமானஇவ்வுலகத் திலிருந்துகொண்டே இறைவனை நெருங்கலாம் என்று தான் பகவத்கீதையும் கூறுகிறது.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

ஆன்மிகமலர்
ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share









# மஹா சிவராத்திரியின்போது அம்பாளுக்கு பூஜை செய்யும்

# நந்திகேஸ்வரர்

சார்ந்தாரைக் காக்கும் சர்வேஸ்வரன், விமோசனம் வேண்டி தனதடி தொழுவோர்க் கெல்லாம் விமோசனத்தோடு, அனுகிரகமும் அளிக்கின்றார். அதில் முனிபுங்கவர்களும், தேவர்களும்கூட அடங்குவர்.

அப்படிப்பட்ட சிறப்புக்குரியவர்கள் இந்தபூவுலகில்தான் சிவபூஜைப் புரிந்து நற்கதியும், நற்பேறுகளும் பெற்றுள்ளனர்.

அவ்வகையில் அதி உன்னதத் தலமாகப் போற்றப்படுகின்றது கிளியனூர்.

தேவாரப் பாடல்பெற்றத் தலங்கள் 274 இல் கடைசித் தலமாக போற்றப்படும் இந்த தலம் மீது திருஞானசம்பந்தர் ஒரு பதிகம் பாடிப் போற்றியுள்ளார்.

வெகு காலமாக வெளி உலகத்திற்கு தெரியாமல் இருந்தது இந்த தலம். பாண்டிச்சேரி "Institute of Indology" சார்பில் 1984 ஆம் ஆண்டு டி.வி. கோபால ஐயர் அவர்களால் இத்தலத்தினையும் சேர்த்து "தேவார பண்முறை" என்கிற தொகுப்பு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அது முதலே இந்த கிளியனூர் திருத்தலம் தேவாரத்தலம் என்பது ஊர்ஜிதமானது.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இந்தத் தலத்தை கிளியன்னவூர் என்று குறிப்பிடுகின்றார்.

கும்பமுனி என்று போற்றப்படும் அகத்திய மகரிஷி இத்தலத்தில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து பூசனைப் புரிந்துள்ளார். அகத்தியர் பூஜித்தக் காரணத்தால் இத்தல பெருமான் அகத்தீஸ்வரர் என்று போற்றலானார்.

சுகப்பிரம்ம ரிஷி தனக்கு ஏற்பட்ட தீராத [குன்ம வியாதி] வயிற்றுவலி தீர, இத்தல சிவபெருமானைப் பூஜித்து விமோசனம் பெற்றுள்ளார்.

கிளிமுகம் கொண்ட சுகப்பிரம்மரிஷி இத்தலத்தினில் வழிபட்டதனால் கிளியனூர் ஆனது இப்பதி. வடமொழியில் சுகபுரி என்றழைப்பர்.

பரந்தாமனானத் திருமாலைத் தாங்கும் நாகங்களின் முதன்மையான ஆதிசேஷனும் இத்தல சிவலிங்க மூர்த்தியை வழிபாடு செய்துள்ளார்.

இதையே....

"பன்னி நின்ற பனுவல்
அகத்தியன் உன்னி நின்று உறுத்தும்
சுகத்தவன் மன்னி நாகம்
முகத்தவர் ஓதலும் முன்னில் நின்ற.
கிளியன்ன வூரனே"!!






என்று சம்பந்தர் மெய்ப்பினைக் கூறுகின்றார். இதைவிடவும் இத்தலத்திற்கு வேறு சான்றுவேண்டுமா என்ன?

காலவ மகரிஷி தனது இரண்டு பெண் குழந்தைகளின் தீராதப் பிணி நீங்க, இப்பதி வந்து தங்கி, தவமுடன் பூஜையும் புரிந்து திருவருள் பெற்றுள்ளார்.

இத்தலத்து அம்பிகையை மஹா சிவராத்திரியின்போது மூன்றாம் காலத்தில் நந்திகேஸ்வரரே பூஜை புரிவதாக தல மஹாத்மியம் தெரிவிக்கின்றது.

சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களில் இப்பகுதி ஓய்மாநாடு என்றும், அதன் மன்னன் நல்லியக்கோடன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முற்கால சோழர்களால் எழுப்பப்பட்ட இக்கோவில், சோழ மன்னர்கள் பலரால் பராமரிக் கப்பட்டும், திருப்பணிகள் செய்யப்பட்டும் வந்துள்ளன.சோழர் கல்வெட்டில் இவ்வூர். "ஜெயங்கொண்டசோழ மண்டலத்து, ஒய்மாநாட்டின் உலகுய்ய வந்த சதுர்வேதி மங்கலத்து கிளிநல்லூர்" என்றும், கிளிஞனூர் என்றும், ஓய்மா நாட்டு விஜயஇராஜேந்திரன் வளநாடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தலத்து ஈசன் திருவக்னீஸ்வரமுடையமகா தேவர் என்றும், பொறிக்கப்பட்டுள்ளது. விஜய நகர மன்னன் மல்லிகார்ஜுனனின் கல்வெட்டில் "கிளிவளநல்லூர்" என்று இவ்வூர்காணப் படுகின்றது. சிவானுபவச் செல்வரானபாலைய ஸ்வாமிகள் மற்றும் சிதம்பரம் ஸ்வாமிகள் ஆகியோரும் கிளியனூர் ஈசனை வழிபட்டுள்ளனர்.

ஊரின் வடகிழக்கே உள்ள பெரிய ஏரியின் கீழ்க்கரையில்அமைந்துள்ளது ஆலயம். முதலில் செங்கற்த் தளியாக இருந்த இக்கோயிலை மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மனாகிய முதலாம் பராந்தகச் சோழன் கருங்கற்தளியாக மாற்றியமைத்துள்ளான்.

கிழக்கும் மேற்குமாக இரண்டு வாயில்கள் உள்ளன. முக மண்டபத்துடன் கூடிய கிழக்கு வாயிலின் வழியாக உள்ளே நுழைய...ஈசான திசையில் நவகிரக சன்னிதியுள்ளது. தென்புறம் ஸ்தல விருக்ஷமான வன்னிமரம் உள்ளது. நடு நாயகமாய் கற்றளியால் ஆன ஸ்வாமி சன்னதி மேற்கு முகமாக அமைந்திருக்க, அதையொட்டிய மகா மண்டபமும், வெளிப்புற மண்டபமும், கிழக்கு பார்த்த அம்பிகை சன்னிதியும், அமையப் பெறுறுள்ளது.

மேற்கு திசைப் பார்த்த ஸ்வாமி ஸ்ரீ அகத்தீஸ்வரர் சதுர ஆவுடைக் கொண்டு அற்புதமாக அருள்பாலிக்கின்றார். அருள் சுரக்கும் அற்புத மூர்த்தம்.

கிழக்கு முகமாய் நின்றவண்ணம் மேலிரு கரங்களில் சங்கு சக்கரமேந்தி புன்னகைததும்ப அருள் சிந்துகின்றாள் அன்னை ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி. கரத்தில் சிறு பின்னம் ஏற்பட்ட காரணத்தால் கும்பாபிஷேகத்தின்போது இந்த அம்பாள் சிலையை மாற்றிட தீர்மானித்திருந்தனர். அப்போது ஆலய பொறுப்பாளர் கனவில் தோன்றிய அம்பிகை, கையொடிந்த உன் தாயை தூக்கி ஏரிந்து விடுவாயா? என்று கேட்க, அதன் பின் பழைய அம்பாள் சிலைக்கே குட முழுக்கு நடத்தினார்கள். ஸ்வாமியும் அம்பாளும் இங்கு மாலைமாற்றும் கோலத்தில் எதிரும் புதிருமாக வீற்றருள்வது சிறப்பு.



மோ.கணேஷ்

நிருர்தி மூலையில் கணபதி சன்னிதியும், வாயு திசையில் கஜ லட்சுமி மற்றும் கந்தன் சன்னதியும் அமைந்துள்ளன.

சிறிய ஆலயம் எனினும் சிற்பகலாப் பொக்கிஷமாக திகழ்கின்றது. சிற்பங்கள் ஒவ்வொன்றும் தத்ரூபமாக

வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் சோழர் கலைநயத்தின் மேன்மையை கூட்டு கின்றது.

ஆலயத்தின் தீர்த்தமாக அக்னி தீர்த்தம் மற்றும் கன்வ தீர்த்தம் ஆலயத்திற்கு மேற்புறம் அமையப்பெற்றுள்ளது.

ஒன்பது கல்வெட்டுக்கள் இங்கு கண்டுபிடிக் கப்பட்டு படியெடுக்கப்பட்டுள்ளன.

அவை....

| |
|---|
| முதலாம் பராந்தகச் சோழன் (கி.பி. 917), |
| முதலாம் இராஜேந்திர சோழன் (கி.பி. 1025), |
| முதலாம் இராஜாதிராஜன் (கி.பி 1046), |
| முதலாம் குலோத்துங்கச் சோழன் (கி.பி. 1073), |
| முதலாம் விக்ரம சோழன் (கி.பி. 1128), |
| முதலாம் இராஜநாராயண சம்புவராயன் (கி.பி. 1338), |
| விஜயநகர மன்னன் மல்லிகார்ஜுனன் (கி.பி. 1447), |
| விஜயநகர மன்னன் அச்சு தராயர் (கி.பி. 1524) |
| விஜய நகர மன்னன் சதாசிவ மகாராயர் (கி.பி.1526) |

ஆகியோரது கல்வெட் டுக்கள் இவ்வாலயத்தில் கண்டெடுக் கப்பட்டுள்ளன.

அதோடு பாண்டியர் கால கல்வெட்டுகளும் இப்பகுதியில் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

பல்லவர், சோழர் மற்றும் விஜய நகர மன்னர்களின் திருப்பணி பற்றிய விரிவானச் செய்திகளை இக்கல்வெட்டுகளின் வாயிலாக நாம் அறியப் பெறலாம்.

அரசுக்குச் சொந்தமான இவ்வாலயத்தில் தினசரி இரண்டு கால பூஜைகள் நடைபெறுகின்றது. தினமும் காலை 8 மணி முதல் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் ஆலயம் திறந்திருக்கும்.

இத்தலத்தின் விசேடங்களாக.. பிரதோஷம், பௌர்ணமி மற்றும் அமாவாசை சிறப்பு வழிபாடு களும், பங்குனி உத்திரம்ஏகதின உற்சவமும் சிறப்புற நடத்தப் படுகின்றன.

சிவராத்திரி நான்குகாலமும் சிறப்பு அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடத்தப்படுகின்றன. அதோடு ஏனைய சிவாலய விசேடங்களும் செவ்வனே அனுசரிக்கப் படுகின்றன.

தீராத பிணியில் வாடுபவர்கள் இத்தல இறைவனுக்கு பாலபிஷேகம் செய்து, அதை அருந்திட, உற்ற பலனுண்டு. இத்தல வழிபாடு திருமணத்தடையோடு, நாகதோஷம், புத்திர தோஷம் போன்றவற்றையும் நீக்கி, வளமும், நலமும் பெற்று வாழ்ந்திட வழிவகுக்கின்றது. சம்பந்தரும் தனது தேவாரத்தில் இவற்றை பதிவு செய்துள்ளார். சுகபுரி கண்டு சுகம் பல பெறு வோம்.

விழுப்புரம் மாவட்டம், வானூர் தாலுகாவில் உள்ள இப்பதி, திண்டிவனம் பாண்டிச்சேரி நெடுஞ்சாலையில் திண்டிவனத்திலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவில் தைலாபுரத்திற்கு அருகே அமைந்துள்ளது....

ஜோதிட கலாநிதி
பழங்காமூர் மோ.கணேஷ் குருக்கள்,
ஆரணி, தொடர்புக்கு: 9789156179

aanmeegamalar.com வழங்கும்
தினம் ஒரு திருக்குறள்







ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள். aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்




நடப்பு காலகட்டத்திலேயே இந்துக்கள் எவ்வளவு
கொடூரத்தை அனுபவித்துள்ளனர்...
அப்போ... முகலாயர்கள், வெள்ளையர்கள் காலத்தில்....?
அனைத்து இந்துக்களும் பார்க்கவேண்டிய படம்...

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# மீனாட்சி அம்மன் பிறவிக்கு காரணமான
# வேம்பத்தூர் கைலாசநாதர்
# சிவன் கோவில்

மதுரை பட்டணத்தில் மணிபுரகத்தை தலை நகராக கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டு நல்லாட்சி புரிந்து மக்களை காத்து வந்த மலையத்துவஜ பாண்டிய மன்னர்க்கு குழந்தை பாக்கியம் வேண்டி சிவன் மீது தீவிர பக்தி கொண்டு சிவனடியார்களுக்கு தொண்டு செய்து வந்தார்.

மன்னரின் தொண்டில் மகிழ்ச்சி அடைந்த சிவனடியார்கள் புத்திரகாமேஷ்டி யாகம் நடத்தி அதன் பலனாக அன்னை பராசக்தியே உங்களுக்கு அவதரிப்பாள். என்று ஆசிவழங்கினார்கள்.

யாக ஏற்பாடுகளை செய்துவிட்டு யாகம் நடைபெறும் முன் கைலாயம் சென்று சிவனை தரிசிக்கமன்னரும் அவர் மனைவி காஞ்சனமலையுடன்யாத்திரையாக புறபட்டுசென்றனர்.

கால சூழ்நிலையால் இயற்கை சீற்றங்களால் யாத்திரையை தொடர முடியாமல் சிவனை மனதில் நினைத்து மனம் உருகி வேண்டினார்கள்.

அப்போது நூறு வயதை கடந்த முதியவர் தள்ளாடியபடி, "மனமே கைலாயம் சிவலிங்கத்தை ஏந்தி கொண்டு எங்கு நிற்கிறாயோ அதுவே கைலாயம்" என கூறியபடியே சென்றார்.

யாத்திரை செல்லும் வழியில், யாத்திரை நிறைவு பெறமால் விடுமோ என வருந்தியபோது, "மனமே கைலாயம்" என, முனிவரின் வாக்கை கேட்டு மனமகிழ்ந்து, மன்னரும் அவரது மனைவியும், சிவலிங்கத்தை கையில் ஏந்தியபடி வேம்பற்றூர் என்னும் ஊரை அடைந்தனர்.

அங்கு ஈசான மூலை வரும்போது நின்றுவிட்டனர். அதன் பின் அவர்களால் செல்ல முடியவில்லை.

"மனமே கைலாயம்" மீண்டும் முனிவரின் குரல் மன்னரின் காதில் விழுந்தது. அந்த இடத்திலேயே, மன்னரும் தேவியரும் கைலாய தரிசன பலனை பெற்று மகிழ்ச்சி அடைந்து, யாத்திரையை நிறைவு செய்தனர்.

புத்திர காமேஷ்டி யாகம் அங்கு நடத்தி அங்கே கோவிலை அமைத்து, கைலாச நாதர் சிவனுக்கும், ஆவுடைய நாயகி அம்பிகைக்கும் திருநாமம் சூட்டி கோவிலைகட்டி, கும்பாபிஷேகம் நடத்தி வழிபட்டனர்.

அதன் பலனாக ஆதிபராசக்தி








அங்கையற் கன்னியாக அன்னை மீனாட்சியே அவதரித்து பல்வேறு திருவிளையாடல்களை நடத்தி மதுரை யை அரசாட்சி செய்து மக்களை காத்து வருவது இன்று பக்தர்களால் நம்பபட்டு வருகிறது.

இவ்வளவு சிறப்புகளைப் பெற்ற இத்திருக் கோவில் சுமார் 88 ஆண்டுகளுக்கு பிறகு சிவனடியார்கள் வழங்கிய நன்கொடையால் திருப்பணிகள் செய்யப்பட்டு ஆவுடைய நாயகி சமேத கைலாசநாதர் திருக்கோவில் மகா கும்பாபி ஷேகம் கடந்த (6.3.2022) ஞாயிறு அன்று நடந்தது.

இங்கு சிறப்பு அம்சமாக பிரம்மனுக்கு தனி சன்னதியும் கல்வி ஞானம் தரும் நவகிரங்களின் புதன் பகவான் வேறு எங்கு இல்லாத வகையில், சிம்ம வாகனத்தில் காட்சி தருகிறார்.

வேம்பத்தூரில் ஆயிரக்கணக்கானதமிழ் புலவர் களும், வேத பண்டிதர்களும் கைலாசநாதரை வணங்கி ஞானம் பெற்று சிறந்து விளங்கியுள்ளனர்.

இதை அறிந்த கம்பர், ஒட்டக்கூத்தர், காள மேகர், கபிலர், பரணர், வேம்பத்தூரில் அவதரித்த கவிராஜபண்டிதர் போன்ற சங்ககால புலவர்கள் பெரும் பேர் பெற்று புகழ் அடைந்தனர்.

80 ஆண்டுகளுக்கு முன்பு, பிறகளூரை சேர்ந்த சின்னகருப்பன் அம்பலம் தனக்கு ஆண் குழந்தை வேண்டி, அதன் பலனாக இக்கோவி லை சீரமைத்து பல சன்னதிகளை உருவாக்கினார்.

அதன்பின் தற்போது பெரு முயற்சியோடு சிவபக்தர்களால் கும்பாபிஷேகம் நிறைவு பெற்று, தற்போது தினமும் மண்டல






அழகுராஜா

பூஜைகள் நடை பெற்று வருகிறது. அன்னை மீனாட்சி தேவியே இங்கு அவதரித்ததால், இங்கு வந்து தரிசனம் செய்யும் பக்தர்களுக்கு கைலாயம் சென்று வந்த பலனும், வெகு நாட்களாக குழந் தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தும் வருகிறது.

பல கிராமங்களில் தற்போது கைலாசம், ஆவுடையம்மாள் எனபெயர் உடைய வயதானவர் களை இங்கு காணலாம். ஆவுடையநாயகி அம்பாள் சமேத கைலாசநாதர் திருக் கோவிலுக்கு மதுரை, சிவகங்கை ஆகிய ஊர்களில் இருந்து நேரடி பஸ் வசதி உள்ளது.

மதுரை ராமேசுவரம் நான்கு வழி சாலையில் இருந்து திருப்பாசேத்தி வழியாக எளிதாக வேம்பத்தூரை அடையலாம். மேலும் இத்திருக் கோவில் பற்றி அறிய 9790325083 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா
தொலைபேசி எண்: 9994162182

# மனம் என்பது புத்தியின் மேலான சிந்தனை

மனித உணர்வுகள் பலப்பல. அதில் பீதியை உண்டாக்கும் உணர்ச்சி மனிதனிடத்தில் இருக்கக்கூடாது. இந்த தன்மையை வேறு எச்சொல்லைக் கொண்டு குறிப்பிடுவதாய் இருந்தாலும் அதை நீ கொள்ளலாகாது. உயிர் வாழும் எந்த மனிதனுக்கும் பயமே வேண்டாம்.

❖❖❖

ஒரு ஆராய்ச்சி வழி பார்த்தால் எல்லா மனிதர்களின் உணர்ச்சிகளிலும் நிம்மதி தரும் உணர்ச்சியைப் போன்று பயத்தை தரும் உணர்ச்சியும் இருக்கும். இவ்வுணர்ச்சியும் மனித இரத்தத் தோடு கலந்ததே. ஆனால் பயமும் குணமும் ஒன்றல்ல. பயத்தை குணமாகக் கொள்ளாதே. பயத்தை குணமாகக் கொண்டால் அது ஆசையிலும் மறைமுகமான தீய செயல்களிலும் உன்னை ஈடுபடச் செய்யும். தீவிரவாதக் கொள்கையும் உலகில் பயத்தை தரும் ஒரு கொள்கையே. பயந்து நடுங்குகின்றவனே மறைந்திருந்து தீவிர வாதத்தை செய்கிறான். நேரடிவாதம் என்பது தன்மையாகும்.

❖❖❖

பெரும்பாலும் மனிதன் தன்னிடம் தோன்றும் எல்லா உணர்ச்சிமயமான நிலை, கொள்கை இவைகளை கட்டுப்படுத்த வேண்டும். சீர் செய்துவிட்டால் நல்லதே. முதலில் மனிதன் செய்ய வேண்டியது தன்னிடம் தோன்றும் உணர்ச்சியை வெற்றி கொள்ள வேண்டும். பிறகே அவனுக்கோ



உனக்கோ உன்னுடைய புத்தியைப் பிடிக்கின்ற கொள்கை ஏற்படுகின்றது. பிறகு நல்ல செயல்களுக்கு தயாராய் இருக்கின்றான்.

❖❖❖

மனம் என்பது புத்தியின் மேலான சிந்தனை ஆகும். புத்தி என்பது உள்ளே இருப்பது. இதற்கு உதாரணம் ஒரு முட்டைக்கோஸ் மீது மேலே உள்ள இலையைப் போன்றதே ஆகும். இதுபோல உள்ள மனம் மட்டுமே தேக அபிமானத்தை கொண்டு பற்றைக் கொண்டிருக்கிறது. பற்றே பாதுகாப்பை விரும்புகிறது. அதுவே பயத்தின் கருவி. இந்த குணம் உனது முன்னேற்றத்திற்கு பயன்படவே படாது. உயர்ந்த தத்துவத்தைத் தொட உன்னால் சிந்திக்கவும் முடியாது.

❖❖❖

இயற்கை என்ற உலகில் பற்றுள்ள நிலை, பற்றையறுக்கும் விருப்பம் என்ற பலநிலைகள் உள்ளன. ஆணோ பெண்ணோ இருவரும் இந்த இரண்டு தன்மைகளையும் சரிபார்த்து கொள்ள வேண்டும். அவர்களிடமே அன்பு, காதல் இவை பிறக்கின்றன.

❖❖❖

அன்பு வடிவமுள்ள மனதில்தான் சுத்தமான காதல் பிறக் கும். வெறுக்கும் குணமுள்ள மனிதனுடைய மனதில் சில சமயம் காதல் அரும்பு விடுவதைப் போன்று தோன்றும். அது காதலல்ல வெறியே. இதனால்தான் சிலர்




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203


காதலில் தோல்வி அடைந்தவுடன் சமுதாயத்தையும், சூழ்நிலையையும், கடவுளையும், மதத்தையும் தவறாக வெறுக்கிறார்கள். தற்பொழுதும் எப்பொழுதும் வெறுப்பு அல்லது வெறுப்புத்தன்மை இவை இரண்டும் உனக்கு கூடவே கூடாது. அவைகளிடம் போய் வருகிறேன் என்று விடை பெற்றுக் கொள்.

❖❖❖

வெறுப்புப் பிரச்சாரம் என்ற கொள்கையை எப்பொழுதும் தூவாதே, கொள்ளாதே, தூண்டாதே.
ஏன் தெரியுமா? இந்த செய்கை நல்ல பாம்பின் விஷத்திற்கு சமம். தயவு செய்து இக்கொள்கையை வலியுறுத்தி தீமை என்ற பூதத்தைப் பிறக்க செய்யாதீர்கள்.

❖❖❖

மெய்யன்பர்களே எனது விருப்பமும் உங்களது விருப்பமும், நமது நாடு முன்னேறிச் செல்ல வேண்டும்.

❖❖❖

உணர்ச்சி வயப்படும் மக்கள் அனைவரும் மண் மீது பாசம் வைத்த மக்களே, பாசம் என்பது மண்ணோடு தொடர்புடையது. உயிரோடு தொடர்புடையதல்ல. இத்தகைய பாசமுள்ள மக்கள் வேறு பற்பல தன்மையுள்ள உணர்ச்சிகளால் கூட நெகிழ்ந்து விடுவார்கள். நீ சிந்தனையில் எவரெஸ்ட் உச்சியை தொட வேண்டும் என்றால் இத்தகைய உணர்ச்சிகளை எல்லாம் நீந்தி மேலே செல்.

❖❖❖

உண்மையை உணருதல், சிந்தித்தல் இவை இரண்டுமே மனிதனின் உருவம். உணர்ச்சி வயப்படும் மனிதனுக்கு நான் குறிப் பிட்ட தன்மையை எய்த முடியாது.

❖❖❖

பயப்படுதல் அல்லது பயப்படுகின்ற தன்மை ஒரு மனிதனுக்கு இருக்கக் கூடாது. இது எந்த வகை யிலும் நற்குணங்கள் நுழைய உனது மூளைக்குள் இடம் கிடைக்காமல் போய்விடும்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# மாரநாடு கருப்பணசாமி

(250-300 ஆண்டுகளுக்கு முன் சிவகங்கை மாவட்டத்தில் திருப்பாச்சேத்தி அருகில் உள்ள மாரநாடு கிராமத்தில் நடைபெற்ற உண்மைச் சம்பவம்)

அரண்மனை அந்தப்புரம். அரசி, இளவரசி, சேடியர் தவிர வேறுயாரும் உள்ளே செல்ல முடியாது. அவ்வளவு பாதுகாப்பு. யாரேனும் உள்ளே சென்றது தெரிந்தால் உடனடியாகத் தூக்கிலிட்டுவிடுவார்கள். அவ்வளவு கடுமையான தண்டனை. இராமநாதபுர சமஸ்தானத்தின் இளவரசி பருவமடைந்து அந்தப்புரத்தில் இருந்தாள். அழகு என்றால் அழகு அவ்வளவு அழகு. பார்த்தோரைப் பரவசப்படுத்தும் அழகு. மக்களுக்கு மகாலெட்சுமி போல் காட்சியளிப்பாள்.

இதனால், சமஸ்தான மன்னர்களுக்குள்கடும் போட்டாபோட்டி. அவளை மணந்து கொண்டால், இராமநாதபுர சமஸ்தானத்திற்கு மன்னனாகி விடலாம், வீரமிக்க மன்னனுக்குச் சொந்த மாகிவிடலாம், ஆளுக்கு ஆளும் ஆச்சு, பேருக்குப் பேரும் ஆச்சு, ஊருக்கு ஊரும் ஆச்சு. அதனால், "நான் நீ" என்று போட்டி போட்டுக் கொண்டு, பெண் கேட்டுத் தூது அனுப்பிக் கொண்டிருந்தனர்; அரசனுக்கோ மட்டற்ற மகிழ்ச்சி. நல்லவனாக, வல்லவனாக ஒருவனைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணியிருந்தான்.

ஆனால், விதி வேறுவகையாக வேலைசெய்தது! ஒருநாள் மாலை, அமைச்சர்களுடன் ஆலோசனையில் இருந்த அரசனுக்கு, அவசர மாக அந்தப் புரத்தில் இருந்து அழைப்பு வந்தது! என்ன அவசரம் என்று எவருக்கும் தெரியவில்லை. அரசனும் அவசர அரசாங்க ஆலோசனைகளை நிறுத்திவைத்துவிட்டு அந்தப் புரத்திற்கு விரைந்து சென்றான்.

அங்கே அதிர்ச்சி காத்திருந்தது! இளவரசி யின் கழுத்தில் இருந்த "அரசமுத்திரை" மாலையைக் காணவில்லை. எங்கு தேடியும் கிடைக்கவில்லை, அந்த மாலையார் கழுத்தில்



www.aanmeegamalar.com

உள்ளதோ அவர்களே அந்நாட்டின் இளைய பட்டம் ஆவர், அந்த மாலையைக் கையில் வைத் திருப்போரே இளவரசியை மணந்து கொள்ளும் அதிகாரம் பெற்றவர் ஆகிவிடுவர்.

கழுத்தில் இருந்த மாலை காணாமல் போனது எப்படி? காணாமல் போனதைக் கண்டுபிடிப்பது எப்படி? மன்னனுக்கு மகளைப் பற்றி ஒரே கவலை. நல்லவனாக வல்லவனாக அமைந்தால், மகளைக் கட்டிக் கொடுப்பதற்குத் தயாராய் இருந்தார். ஆனால், இப்போது நிலைமை வேறு, மாலையை எவன் எடுத்திருந்தாலும், எதுவும் செய்ய முடியாது! பேசாமல் கொள்ளாமல் மாலையை வைத் திருப்பவனுக்கு மகளைத் திருமணம் செய்து கொடுத்துவிட வேண்டியதுதான். வேறு என்ன செய்யமுடியும்!

யார் கையிலாவது கிடைத்து ஏதாவது ஏடாகூடமாக நடந்து விட்டால் என்ன செய்வது! அந்தப் புரத்திற்குள் நுழைந்த அந்தக் களவாணி யார்? ஆயிரத்தெட்டு விசாரணைகள். இளவரசிக் குப் பதில் சொல்வதே ஒருபெரும் தொல்லையாய் போய்விட்டது!

ஆளேபுகமுடியாத அந்தப்புரத்தில் அரசமுத்திரை பதித்த நகை எப்படிக் காணாமல் போனது?அரண் மனையிலேயே களவு நடந்துள்ளதால்,மக்களி டம் மரியாதை குறைவதை உணர ஆரம்பித்தான் அரசன். என்ன செய்வதென்று எப்போதும்ஒரே நினைப்பு!. நாடுபோனாலும் போகட்டும், நகரம் போனாலும் போகட்டும், மானம் போய் விடக் கூடாதே! எத்தனைபேர் பெண் கேட்டுத் தூது அனுப்பியுள்ளனர். அத்தனைபேர் முகத்திலும் எப்படி இனி நான் விழிப் பேன் என்று மன்னன் இரவு முழுவதும் இதை மட்டுமே எண்ணியிருந்தான். எண்ணி எண்ணி உருக்குலைந்திருந்தான்.

எப்போதும் சரியாய் ஓடுவது காலம் மட்டுமே! விடியற்காலம் வந்துது! அவையைக் கூட்டி ஆலோசனை கேட்டான் அரசன். ஆளாளுக்கு ஆள், ஆயிரத்தெட்டு யோசனை சொன்னார்கள். ஒன்று கூட உருப்படியாய் இல்லை. என்ன செய்வது? எதுவுமே தெரியவில்லை யாருக்கும்!. அரசன், யோசனைகள் ஒவ்வொன்றையும், ஒவ் வொன்றாகச் செயல்படுத்த முடிவுசெய்தான் .

அரண்மனை அந்தப்புரத்தில் இருந்த அனை வரையும் ஆயிரத்தெட்டுக் கேள்விகள் கேட்டு துளைத்தெடுத்தனர் அரசு அதிகாரிகள். யாருக்கும் எதுவும் தெரியவில்லை. முத்திரைமாலை போன இடத்தை அறியமுடியவில்லை. அதிகாரிகள் விசாரணை விபரங்களை மன்னனிடம் கூறினர். அரசனுக்குத் தாளமுடியாத வருத்தம். மானம் போகிறதே என்று கண் கலங்கினான். என்ன செய்வது? ”முத்திரை மாலை கிடைக்கும்வரை அத் தனை பேரையும் அரண்மனையிலேயே அடைத்து வையுங்கள்!" என்று உத்தரவு போட்டான்.

அரண்மனையிலிருந்து யாரும் உள்ளே செல்ல முடியவில்லை. உள்ளே யிருந்த யாரும் வெளியே வரமுடிய வில்லை. எல்லா இடமும் தேடியாச்சு. அத்தனைபேர் தேடியும் முத்திரைமாலை மட்டும் அகப்படவே இல்லை. என்ன செய்வது? அரண் மனையே ஸ்தம்பித்து. எனவே என்ன ஆலோசனை என்றாலும் ஏற்கத் தயாராக இருந்தான் அரசன். ஆலோசனைக்கு மேல் ஆலோசனை. அதில் ஒன்று தான் குறிகேட்பது.

குறிசொல்வோர் அனைவரையும் அரண் மனைக்கு அழைத்து வரச் செய்தான் அரசன். குறிசொல் வோர் சொன்ன குறியெல்லாம் தவ றாகப் போனது; குறி சொன்னது போல் மாலை கிடைக்கவில்லை; அரசனுக்குக் கோபமான கோபம். அரசுமுத்திரைமாலை கிடைக்காமல் யாரையும் வெளியே விடுவதாக இல்லை.

தவறாகக் குறி சொன்னவர்களையும்சிறையில் அடைத்தான் அரசன். ஒருவர் இருவர்அல்ல, ஒரு ஊருக்கு இரண்டு மூன்று என்று குறி சொல்வோர் இருந்தனர். எத்தனை பேர் இருந்து என்ன செய்ய? அரசமுத்திரை மாலை இருக்கும் இடத்தைக் கண்டறிந்து குறி சொல்ல முடியவில்லை! அரசனது கோபத்துக்கு அஞ்சி, நாட்டிலிருந்த குறிசொல்வோர் எல்லாம் அண்டை நாடு, அயலார்வீடு என ஓடி ஒளிந்து கொண்டனர்.

குறிசொல்வோரில் ஒருவன் மட்டுமே துணிந்து அரசன் முன் சென்று நின்றான். "என்ன? சொல்!" என்றான் மன்னன். "எனக்குச் சரியாகக் குறி சொல்லத் தெரியாது! ஆனால் சரியாகக் குறி சொல்பவனைத் தெரியும்; அவன் ஒருவனை மட்டும் அழைத்து வந்தால், தேடும் பொருள் கிடைத்துவிடும்" என்றான்.

குறிசொல்பவன் சொன்ன சொல் மன்னனின் காதில் வீழ்ந்தது. "நீ சொல்வதுபோல் நடந்து விட் டால், உங்கள் அனைவரையும் விடுதலை செய்து விடுகிறேன்” என்று மன்னன் வாக்களித்தான். மந்திரியை அழைத்தான், "இவன் யாரைச் சொல்கிறானோ, அவனை இங்கே அழைத்து வாருங்கள். இது நமது ஆணை” என்றான் .

"குறி தப்பாமல் சொல்பவன் நாட்டிலேயே ஒரு வன்தான் உண்டு; அவன்தான், "மாரநாட்டுக் கோடாங்கி". அவன் கோடாங்கி எடுத்து அடித்தால்,

கருப்பணசாமி வரும். மாரநாட்டுக் கருப்பணசாமி வந்து சொல்லும்" என்றனர்

அரசு அதிகாரிகள் விரைந்தனர், மாரநாடு கிராமத்திற்கு. இராமநாதபுரத்திலிருந்து,பரமக்குடி, மானாமதுரை, திருப்பாச்சேத்தி வந்து மாரநாடு கிராமத்திற்கு வந்து சேர்ந்தனர்.

ஊரின் உள்ளே நுழையும் முன்பு, முகப்பு வாயிலிலேயே, கண்மாய்க்கரை ஓரமாகக் கருப்பணசாமி கோயில் இருந்தது. கோயில் உள்ளே சென்று கருப்பணசாமியைக் கும்பிட்டனர். கருவறையில் சிலையோ, படங்களோ எதுவும் இல்லை, வெறுமனே இருந்தது, கருவறை முன் மண்டபத்தில் சூலம் மட்டும் நடப்பட்டிருந்தது. அந்தச் சூலத்தையே கருப்பணசாமி என மக்கள் வணங்கி வருகின்றனர், கருப்பண சாமி வழிபாடு முடிந்ததும், கோயில் பூசரியிடம், "கோடாங்கியைப் பார்க்க வந்திருக்கிறோம்" என்றனர்.

இப்படி மண்டபத்தில் உட்காருங்கள் என்று சொல்லி பிரசாதத் தட்டை கோயில் கருவறையில் வைத்து விட்டு அங்கே வந்து பூசாரியும் சேர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

சொல்லுங்கள், "மாரநாடு கோயில் பூசாரி தான் மாரநாடுகோடங்கி ஆவான்". நான் தான் அந்தக் கோடாங்கி, உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான் கோடாங்கி. வந்தர்களுக்கு ஒரே ஆச்சரியம். ஆஜாகுபான உடம்பைத் தேடிவந்தவர்களுக்கு ஒரே அதிர்ச்சி. ஒல்லியான ஒருவரைக் கோடங்கியாகப் பார்த்தவுடன் அவர்களுக்கு ஒரே ஆச்சரியம்,கோடாங்கி, நாங்கள் வந்த நோக் கம், என்ன என்றால், "நீங்கள் இராமநாதபுரம் அரண்மனைக்கு வந்து குறி சொல்ல வேண்டும்", இது அரச உத்தவரவு என்றனர்.

"நான் குறி சொல்வது இல்லை, இந்தகருப்பணசாமிதான் வந்து குறி சொல்லுவான், உங்களுக்கு யார் வேண்டும்?" என்று கேட்டார் கோடாங்கி.

"எங்களுக்குக் குறி சொல்ல வேண்டும், கருப்பணசாமிதான் குறிசொல்லும் என்றால், சாமியைத்தான் அழைத்துச் செல்ல வேண்டும்" என்றனர்.

"கருப்பணசாமி வருவது என்றால், சும்மாவா? ஒட்டு மச்சம்கூட இல்லாத வெள்ளைக்குதிரையில் தான் கருப்பணசாமி வருவார். முடிந்தால்



அந்தமாதிரிக் குதிரையுடன் வாருங்கள். அல்லது வரும் மாசிமாதம் மகாசிவராத்தி அன்றுதான் திருவிழாபற்றிப் பேசி முடிவு செய்வார்கள்.பங்குனி மாதம் திருவிழா நடைபெறும், சாமிபுறப்பாடு இருக்கும், அப்போது வந்து குறி கேளுங்கள்'' என்று கூறிமுடித்தார்.

கோடாங்கி சொன்னது எல்லாம் சொல்மாறாமல் இராமநாதபுர மன்னனிடம் கூறப்பட்டன. மானம் போகிற பிரச்சனை ஆயிற்றே. எனவே ''உடன டியாகக் கோடாங்கி கூறியது போல் குதிரை ஒன்றை அனுப்பி வைத்து அழைத்து வாருங்கள்'' என்று சொன்னான்.

மந்திரி, தயங்கித் தயங்கி மன்னன் அருகில் சென்று, "மன்னா! கோடாங்கி சொல்லியபடி, ஒட்டு மச்சம்கூட இல்லாமல் வெள்ளைவேளோ் குதிரை ஒன்றே ஒன்றுதான் உள்ளது, அதுதான் ஒரே யோசனை" என்றான். ''ஒன்று இருக்கிறதல்லவா? அந்தக் குதிரையைக் கூட்டிச் செல்வதற்கு ஏன் இத்தனை தயக்கம்?'' என்று மன்னன் கேட்டான்.

“அது பட்டத்துக் குதிரை மன்னா! பட்டத்துக் குதிரையில் யார் ஏறி வருகிறாரோ அவரே அந் நாட்டின் மன்னன் ஆவான், பட்டத்துக் குதிரையில் கோடாங்கி ஏறியவுடன், ஏடாகூடமாக ஏதாவது செய்தால், என்ன செய்வது? ஒரே நாளில் ஓராயிரம் கட்டளைகளைப் பிறப்பித்தால் என்ன செய்வது? பட்டத்துக் குதிரையைத் தவிர்த்து, மற்றொரு குதிரைக்கு எங்கே போவது! மற்றொரு குதிரை வாங்கிவரும் வரை காத்திருக்க முடியாதே!'' என விடை கிடைத்தது.

இருக்கும் மானத்தைக் காத்தாக வேண்டுமே! என்ன விலையும் கொடுக்கத் தயாராய்இருந்தான் மன்னன், மன்னனுக்குப் பட்டத்துக் குதிரையை அனுப்பிவைப்பதைத் தவிர வேறு வழியும் தெரியவில்லை, மன்னன் பட்டத்துக் குதிரையை மாரநாட்டிற்கு அனுப்பி வைத்தான், மாரநாடு கருப்பணசாமி கோயில் பூசாரியான கோடாங்கி, வந்திருந்த பட்டத்துக் குதிரைக்கு மாலை அணிவித்தான், மரியாதை செய்தான். உடுக் கையையும் விபூதிப் பையையும் எடுத்துக் கொண் டான், கருப்பணசாமியை வணங்கினான்.

அனைவரும் மாரநாட்டிலிருந்து இராமநாதபுரத் திற்குச் சொல்லத் தயாராய் இருந்தனர்; ஆனால் கோடாங்கி குதிரையில் ஏறவில்லை!

மந்திரி, கோடாங்கியிடம் சென்று, "குதிரையில் ஏறவில்லையே"? என்று கேட்டான்! ''பட்டத்துக் குதிரையில் கருப்பணசாமிதான் ஏறி வரும். நான் சாமிகூட ஓடியே வந்துவிடுவேன் என்றான் கோடாங்கி. மற்றொரு குதிரையை ஏற்பாடு செய் கிறேன், அதில் ஏறி வாருங்கள் என்றான் மந்திரி. கோடாங்கி மறுத்துவிட்டான். சாமி பாதத்துக்கு மேலே நான் இருக்கக்கூடாது. எனவே நான் இப் படியே சாமிகூட ஓடியே வந்து விடுவேன்'' என்றான்.

பட்டத்துக்குதிரையில் ஒரு மனிதன் ஏறிவராமல் தெய்வம் ஏறிவருவது மந்திரிக்கு பெருமையாய் இருந்தது. தான் நினைத்தபடி ஏதுவும் ஏடாகூடமாக நடக்க வாய்ப்பு இல்லை என எண்ணி மனநிறைவடைந்தான் மந்திரி.

பட்டத்துக்குதிரை, கோடாங்கி போட்டுவிட்ட மாலையுடன் முன்னே சென்றது. பட்டத்துக் குதிரையுடன் கோடாங்கியும் ஒன்றாக ஓடத் துவங்கினான். மந்திரியும் மற்றோரும் அவரவர் குதிரையில் ஏறிப் புறப்பட்டனர். மாரநாடு ஊரே ஒன்றாக இணைந்து ஓடத் துவங்கியது. வழி நெடுக, அலையலையாய் மக்கள் கூட்டம்,

வழியெல்லாம் தண்ணீர் தெளித்து, பாதைஎங்கும் மாக்கோலம் போட்டுத் தோரணம் கட்டி, கொம்பு ஊதி வரவேற்பு செய்தனர் மக்கள். தெய்வத்திற்கும் அரசனுக்கும் செய்யும் மரியாதை அத்தனையும் செய்து, பட்டத்துக்குதிரையுடன் ஓடிவரும் கோடாங்கியுடன் ஒன்றாய் சேர்ந்து ஓடத் துவங்கினர் மக்கள்.

மாரநாட்டிலிருந்து கிளம்பி, திருப்பாச்சேத்தி, மானாமதுரை, பரமக்குடி வழியாக இராமநாதபுரம் அரண்மனை வந்தது சேர்ந்தது பட்டத்துக் குதிரை. குதிரையின் பின் நாடே ஒன்று திரண்டு ஓடி வந்து சேர்ந்தது ஏறத்தாழ எழுபதுகல் தூரம், மாரநாடு கோயிலில் துவங்கிய ஓட்டம் இராமநாதபுரம் அரண்மனை வாயிலில் வந்துதான் நின்றது.

அரண்மனை வாயிலுக்கு வந்து வரவேற்றான் மன்னன், கோடாங்கி எதிரே உட்கார்ந்து கொண்டான், உடுக்கையை எடுத்து அடித்து கருப்பணசாமியை வரவழைத்தான் கோடாங்கி, "என்னை எதுக்கு இங்கே அழைக்கிறாய்? உனக்கு என்ன வேண்டும்? " என்று மன்னனிடம் கேட்டது கருப்பணசாமி.

"சாமி, மன்னனான எனக்கு ஒரு மானப் பிரச்சனை, பிரச்சனைக்கு உரிய பொருள் எங்கே இருக்கிறது என்று கண்டறிய முடியவில்லை" அதனால் குறி சொல்ல வேண்டும் என்றான் மன்னன். "மன்னன் கேட்டால், மறுக்கக்கூடாது! உன்னைக் காத்து அருளுவோம், இரண்டு குறிக்குமேல் கேட்கக் கூடாது!, கேள், சொல்கிறேன்" என்றது கருப்பணசாமி,

"வந்திருப்பது கருப்பணசாமிதான் என்று எப்படி இந்த மன்னனும் இங்குள்ள மக்களும் நம்புவது?" என்று கேட்டான் மன்னன்,

"முதற்குறி கேட்டுள்ளாய், கருப்பணன் வந்த குதிரையில் மற்றொருவன் ஏறக்கூடாது, எனவே நான் வந்த வெள்ளைக்குதிரை நின்றபடியே இறந் திருக்கும் பார்" என்றது கருப்பணசாமி,

எல்லோரும் ஒடிச் சென்று பார்த்தனர்.மன்னன் முன்வந்து, நின்ற குதிரையைத் தொட்டுப் பார்த் தான், அவ்வளவுதான் சடமாய் நின்ற குதிரை செத்துப் பிணமாய் விழுந்தது, பட்டத்துக்குதிரை பரிதாபமாய் இறந்துகிடப்பது கண்டு மன்னன் உள்ளம் பதைபதைத்தது!

இருப்பினும் கருப்பணசாமியே அரண்மனைக்கு வந்து குறி சொல்லிக் கொண்டிருப்பதை நினைத் துப் பெருமை கொண்டான் மன்னன்.

ஒடோடி உள்ளே சென்றான், கருப்பணசாமியின் காலில் விழுந்து வணங்கினான், "சாமி என்பிழை யைப் பொருத்தருள வேண்டும், மனிதன் ஒருவன் கோடங்கியுடன் வந்து குறி சொல்வதாகத் தவறாக நினைத்துவிட்டேன். குறிசொல்வது மாரநாடு கருப்பணசாமி என்று அறியாமல் நான் செய்த பிழையைப் பொருத்தருள வேண்டும்" என்று கருப்பணசாமியிடம் வேண்டிக் கொண்டான்.

"என்மகள் கழுத்தில் அணிந்திருந்த அரச முத்திரைமாலையைக் காணவில்லை?, கருப்பண சாமிதான் எங்களைக் காத்தருள வேண்டும்" என்றான் மன்னன்.

"இரண்டாவது குறி கேட்கிறாய், மன்னனே, காணாமல் போன அரசமுத்திரைமாலை, அரண் மனை அந்தப்புரத்தில் இளவரசி குளிக்கும் அறை யில் தண்ணீர் வெளியேறும் தூம்பின் உள்ளே கிடக்கிறது, போய் எடுத்து வரச் சொல்" என்றது கருப்பணசாமி.

மன்னனும்"எடுத்துவாருங்கள்" எனக் கட்ட ளை இட்டான், மன்னன் இட்ட கட்டளையை மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

கோடாங்கியையும் மன்னனையும் தவிரக் கூடியிருந்தோர் அனைவரும் அரண்மனை அந்தப்புரம் நோக்கி ஒடினர். மன்னன் மட்டும் கருப்பணசாமியின் அருகிலேயே நின்றான்.

பணியாட்கள் தூம்பாக்குழியைத் தோண்டி அரசமுத்திரை மாலையை கண்டெடுத்தனர். மந்திரியும் மக்களும் கருப்பணசாமி காலில் கும்பிட்டுவிழ முற்பட்டனர்.

கோடாங்கி அவர்களைக் கும்பிட்டு விழாமல்




தடுத்துவிட்டான். "மன்னனுக்குப் பிரசாதம் கொடுத்துவிட்டு கருப்பணசாமி மலையேறிப் போய்விட்டது, என் காலில் நீங்கள் யாரும் விழுந்து கும்பிடக்கூடாது" என்றான் கோடாங்கி.

மன்னனின் மானம் மட்டுமன்று; மக்களின் மானமும் காக்கப்பட்டுள்ளது. காத்தவன் அந்த மாரநாடு கருப்பணசாமி என்றான் கோடாங்கி.

"எங்கள் மானத்தைக் காத்த, கருப்பணசாமிக்கு நாங்கள் எல்லாம் அடிமை" என்றனர் மன்னனும் மக்களும். தங்கக்காசுகள் உட்பட, தாம்பாலம் தாம்பலமாய் பரிசுப் பொருட்களைக் கொடுத்தனர்.

ஆனால், கோடாங்கி அவற்றைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை, "மானம் காத்த கருப்பணசாமிக்கு, மாலை அணிவித்து மரியாதை செய்யுங்கள்" என்றான். "நான் உண்பது நாழி உடுப்பது இரண்டு" என்றான். அப்படியே செய்வ தாக வாக்களித்தான் மன்னன்.

சிறைவைக்கப்பட்டிருந்த அரண்மனை அந்தப் புறத்தில் பணியாற்றியோர் மற்றும் குறிசொன்ன அனைவரும் விடுவிக்கப்பட்டனர், அவரவர் செய்து வந்த தொழிலை அப்படியே தொடர்ந்து செய்துவருமாறு மன்னன் ஆணையிட்டான்,

சமபந்தி போஜனத்திற்கு ஏற்பாடு செய்தான்.




மன்னனும், கோடாங்கியும் மந்திரியும் மக்களும் ஒன்றாய் உட்கார்ந்து உணவருந்தினர். கோடாங் கிக்கு ஒரு வேட்டியும் துண்டும் பரிசாகக் கொடுத்தான் மன்னன்,

இதுநடந்து இருநூற்றைம்பது முன்னூறு ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது. இருந்தாலும், இன்றும் ஒருகுறையும் இல்லாமல், மரபு மாறாமல் செய்து வருகின்றனர் மன்னர் குடும்பத்தினர்.

பங்குனித் திருவிழாவில் கருப்பணசாமி புறப்பாடு ஆரம்பித்தவுடன், முதல் மரியாதையாகக் கருப்பணசாமிக்கு இராமநாதபுரஅரண்மனை மாலை அணிவிக்கப்படுகிறது. அரண்மனை மாலையைத் தொடர்ந்து மக்கள் அனைவரும் சாமிக்கு மாலை அணிவித்து வணங்கி வழிபட்டு வாழ்க்கையில் உய்வடைகின்றனர்,

இரவு முழுவதும் கருப்பணசாமி ஆட்டம், மாலை என்றால் மாலை, மலைபோல் குமிந்து விழும், அதை அப்படியே குவித்து வைத்திருப்பர். இரவு முடிந்து சூரியன் உதிப்பதற்கு முன் கருப்பணசாமி ஆடிக் குறிசொல்லி முடித்துவிடும். விடிந்தால், சாமியும் இருக்காது. மலைபோல் குவிந்த மாலையும் இருக்காது !

கருப்பணசாமி கோயிலுக்குள் சென்ற மறுவினாடியே அத்தனை மாலையையும் அவரவர் பிரசாதமாக எண்ணிப் பக்தர்கள் எடுத்துச் சென்று விடுவர், குறிகேட்க விழைவோர் எல்லாம் வந்து சாமிக்கு மாலையணிவித்து, மரியாதை செய்து, வேண்டிய குறி கேட்டு உய்யலாம்.

இத்த உண்மைக் கதையைப் படித்தோரும், படித்ததைப் பிறருக்குச் சொன்னோரும், அதைக் கேட்டோரும் மாரநாடு கருப்பணசாமியின் திரு வருளாள் இன்னல்கள் நீங்கி நல்வாழ்வு வாழ்வு வாழ்வர்!.

ஆன்மிகமலர்
ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை
செய்யும் நமது
சேனலை
Subscribe
like & share

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்





















# நொய்டா கோவில்களில் மகா சிவராத்திரி விழா கோலாகல கொண்டாட்டம்











மகா சிவராத்திரியை முன்னிட்டு, நொய்டா, செக்டார் 22ல் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருக்கோயிலில், மார்ச் 1ஆம் தேதி செவ்வாய்கிழமை, சிவபெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது.

இதில் நொய்டாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் கலந்து கொண் டனர். பூஜை மற்றும் அபிஷேகத்தை ஸ்ரீ ஜெகதீசன் சிவாச்சாரியார் நிகழ்த்தினார், சென்னையை சேர்ந்த ஸ்ரீ வீரேஸ்வர சிவாச்சாரியார் ருத்ரம் மற்றும் சாமகம் வாசித்தார்.

மேலும், சிவராத்திரி பூஜை செய்வ தால் ஏற்படும் பலன்கள் குறித்தும் சுருக்கமாக விளக்கமளித்தார். மகா தீபாராதனையுடன் நிகழ்ச்சி நிறை வடைந்து, பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

மேலும், இதையொட்டி, நொய்டா, செக்டார் 62, ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயர் கோவிலில், காலை நேரத்தில், ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேய பகவானுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது.

அனைத்து கோவிட் விதிமுறைகளும் பின்பற்றப்பட்டன, கோயில் நிர்வாகம் அதன் பக்தர்கள் அனைவரும் முக கவசம் மற்றும் கோவிட் பாதுகாப்பு வழிமுறைகள் பின்பற்றப்பட்டன.



எஸ்.வெங்கடேசன்

செக்டார் 22ல் உள்ள இந்த ஆலயம், யூனிட் 2ல், வேதப் பிரச் சார் சன்ஸ்தான் ரெஜிடனால் நிர்வகிக்கப்படுகிறது, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக பக்தர் களுக்கு சேவை செய்து வருகிறது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா

தொடர்பு எண் போன்: 9811161370

# சென்னையில் குருசாமிகளின் சங்கமம்

சென்னையில் ஸ்ரீ ஐயப்ப தத்துவமசி சங்கமம் நிகழ்ச்சி ஏப்ரல் 3ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மாபெரும் குருசாமிகள் அனைத்து மாநிலம் மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்த குருசாமிகள் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இந்நிகழ்ச்சி, காலை முதல் நடைபெறவுள்ளது. நிகழ்ச்சியின் தொடக்கமாக, காலையில் ஐயப்ப தேர்பவனி யாத்திரை ஊர்வலம் நடைபெற விருக்கிறது.

இதில் குருசாமிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க விருக்கின்றனர்.

இரண்டாவதாக புஷ்பாஞ்சலி அமைப்பின் கொடியினை அனைத்து குருசுவாமிகள் சார்பில் ஏற்றி வைக்கப்பட விருக்கிறது.

மூன்றாவதாக மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

காலை சிற்றுண்டி முடிந்து மதியம் 2 மணி அளவில் நிகழ்ச்சி துவங்கவுள்ளது.

முதல் நிகழ்ச்சியாக மேடையில் வீற்றிருக்கும் ஐயப்பனுக்கு மேள தாளங்களுடன் சரண கோஷத்துடன் கற்பூர தீபாராதனை நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட மாநில நிர்வாகிகள் வாழ்த்தி பேசுகிறார்கள். அதைத்தொடர்ந்து, பாடகர் ஸ்ரீஹரி மாவட்ட நிர்வாகிகளை அறிமுகம் செய்துவைக்கிறார்.

சபரிமலை ஐயப்பனின் வம்சாவழிதிருமேனி உயர்திரு பந்தள ராஜா அவர்களின் திருக்கரங்களால், "புஷ்பாஞ்சலி 20 ஆம் ஆண்டு தொடக்க விழா சிறப்பு மலர்" வெளியிடப்படவிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து, சபரிமலை தந்திரி பிரம்மஸ்ரீ மகேஷ் மோகனரு அவர்கள் உறுப்பினர் அடையாள அட்டையை வழங்குகிறார்.

இதன் தொடர்ச்சியாக முக்கிய பிரமுகர் விருந்தினராக கலந்துகொண்டு புஷ்பாஞ்சலி விருதினை வழங்குகிறார். சபரிமலை மேல்சாந்தி பிரம்மஸ்ரீ அவர்கள் திருக்கரங்களால் நினைவு சான்றிதழ் வழங்கப்படவிருக்கின்றன.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளும் அனைவரும் புஷ்பாஞ்சலி சிறப்பு மலர் இந்த அமைப்பைப் பற்றி செய்யும் சேவையை




பற்றி வாழ்த்தி பேசுகிறார்கள்.

இந்த ஸ்ரீ ஐயப்ப தத்துவமசி சங்கமம் விழாவை புஷ்பாஞ்சலி ஐயப்பா சபரிமலை சேவா PASS மாநில நிர்வாகம் ஏற்பாடு செய்து வருகிறது.

வெளி மாநிலங்களிலிருந்தும் வெளி மாவட்டங்களில் இருந்தும் வரும் குருசாமிக்கு ஐய்யப்ப சாமிகளுக்கு சகல வசதிகளையும் செய்து தர குழு அமைக்கப்பட்டுள்ளது.

S. ஸ்ரீனிவாச கதிர், நிறுவனர், மாநிலதலைவர் தொடர்பு எண்: 9382134536



AVARAIKKAI THIRATTAI KUZHAMBU, BEETROOT PORIYAL
கீதாசமையல்
அவரைக்காய் திரட்டைக் குழம்பு பீட்ரூட் பொரியல்
குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு வாயு பிரச்சனை தீர்க்கும் உணவு
STRAWBERRY KESARI
கீதாசமையல்
ஸ்டாபெரி கேசரி
பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள
கீதாசமையல்
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்
கீதாசமையல்
THINAI VEGETABLE BRINJ
திணை வெஜிடேபிள் பிரிஞ்ச்
geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்
You Tube
LIKE & SHARE

# ஆன்மீக வழியில் அமைதி

ஆன்மிகம் அனைவரையும் உறுதியாக நல்வழியில் நடத்திச் செல்லும். ஆன்மிகம் பற்றி நாம் மேடையில் மணிக்கணக்கில் பேசலாம். மற்றவர்களுக்கு நமக்குத் தெரிந்த ஆன்மிகம் பற்றி `விளக்கமாக சொல்லிக் கொடுக்கலாம். இராமாயணம், மகாபாரதம், திருவாசகம், பெரியபுராணம் போன்ற ஆன்மிகம் குறித்த புத்தகங்களைப் படித்து நாம் ஓரளவுக்கு அமைதி பெறலாம். 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்று கூறுவதிலிருந்து திருவாசகத்தின் பெருமையை அறிந்து கொள்ளலாம். நாம் ஆன்மீகம் சம்பந்தமான புத்தகங்களைப் படிப்பதால் மட்டும் ஆன்மீகத்தில் முன்னேற்றம் கிடைக்குமா என்றால் 'இல்லை' என்றுதான் கூற வேண்டும்.

தியானம் செய்வது பற்றி படித்ததாலோ, கேட்டதாலோ அல்லது பேசினாலோ தியானத்தின் மூலம் கிடைக்கும் பலன் மற்றும் அனுபவம் மன அமைதி போன்றவை நமக்கு கிடைத்து விடாது. நமக்குப் பசி வந்தால் என்ன செய்ய வேண்டும். நமக்குப் பிடித்தமான உணவை சாப்பிட வேண்டும் என்று மற்றவர்கள் நம்மிடம் எடுத்துக் கூறிவிட்டால் நமது பசி அடங்கி விடுமா? நமக்குப் பசி வந்தால் உணவினை நாம் தயார் செய்துதான் சாப்பிட வேண்டும் என்பதை புத்தகத்தின் மூலம் படித்து தெரிந்து கொண்டால் நமது பசியானது நீங்கி விடுமா?

நமக்கு பசி வந்தால் உணவுக்குத் தேவையான பொருள்களை சேகரித்து தயார் செய்துதான் சாப்பிட வேண்டும். நாமோ மற்றவர்களோ தயார் செய்த உணவினை எடுத்து வைத்து நாம் சாப்பிட்டால்தான் நமது பசியானது நீங்கும். உணவை தயார் செய்வதற்கு அரைமணி நேரம்கூட ஆகலாம். அதுவரை நமது பசியினை பொறுத்துக் கொள்ள வேண்டும். உணவை தயார் செய்தபின் அதனை சாப்பிடுவதற்கு ஐந்து நிமிடம்தான் ஆகும். அதுபோல் ஆன்மிகம் பற்றி அறிய



வேண்டுமெனில் தகுந்த ஒரு ஆன்மீக குருவை நாடிச்செல்ல வேண்டும்.

அவர் கூறும் ஆன்மீகக் கருத்துக்களை நமது மனதில் நன்கு பதிய வைத்துக்கொள்ள வேண்டும். மனதில் பதிய வைத்தபின் அதன்படி செயல்படுத்த வேண்டும். அதாவது ஆன்மீகப் பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டால்தான் நாம் ஆன்மீகத்தில் முன்னேற்றம் காணமுடியும். ஆன்மீகப் பயிற்சியின் மூலம் நாம் தேடும் விரும்பும் மன அமைதியை பெற முடியும். அதாவது தியானப்பயிற்சியின் மூலம் நமக்குள் ஓர் அனுபவம் ஏற்பட்டு மன அமைதியைப் பெறுவதற்கு முடியும். தியானத்தின் பலனையும் இனம்புரியாத ஒருவிதமான அனுபவத்தையும் உணர்ந்து அதனைப் பெறுவதற்கு முடியும்.

கல்லூரிகளில் தத்துவம் சம்பந்தமாக ஒரு பட்டப்படிப்பு உள்ளது. பெரும்பாலும் நன்கு வசதி படைத்தவர்கள் கல்லூரியில் சென்று படிப்பார்கள். அவர்கள் படிப்பது எதற்கு என்றால் கல்லூரியில் சென்று படித்து ஒரு பட்டம் வாங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக படிப்பார்கள். அவர்கள் படித்து தங்களது அறிவை பெருக்கிக் கொள்ள வேண்டுமென்றோ அல்லது அதன்மூலம் வேலை வாய்ப்பை பெற வேண்டும் என்ற நிலையில் அவர்கள் உயர்கல்வியை படிப்பதில்லை. மேலும் தங்களை சமூகத்தில் உயர்ந்த நிலையில் கல்வியில் பட்டம் எல்லாம் வாங்கியுள்ளார் என்று மற்றவர்கள் கருதவேண்டும் என்ற நோக்கத்தில் கல்லூரியில் சேர்ந்து படிக்கிறார்கள். அவர்கள் நோக்கமெல்லாம் ஒரு பட்டம் பெறுவதற்கு வேண்டும் என்ற நோக்கில்தான் படிப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தேர்ந்து எடுப்பது பொருளாதாரம் அல்லது தத்துவம் சம்பந்தப்பட்டதாக இருக்கும். அவர்கள் தத்துவம் படிப்பதனால் மட்டும் ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைவதற்கு முடியாது. ஏட்டுப்படிப்பு கறிக்கு உதவாது என்பதுபோல்தான் தத்துவப் பட்டப்படிப்பு மற்றும் பொருளாதாரம் படிப்பதும் ஆகும்.

சர்க்கரை என்று ஒரு காகிதத்தில் எழுதி அதை வாயில் போட்டு சுவைத்தால் இனிப்பின் சுவையை நாம் உணரமுடியுமா? உண்மையான சர்க்கரையை வாயில் போட்டால்தான் இனிப்பின் சுவையை பற்றி உணரமுடியும். அதுபோல்தான் ஆன்மீகத்தில் நாம் முன்னேற்றம் அடைய வேண்டுமெனில் ஆன்மீக குரு கூறும் தியானம் ஜபம் போன்ற பயிற்சிகளைத் தவறாமல் பின்பற்றி மன அமைதி மற்றும் ஆன்மீக முன்னேற்றம் பெறுவதற்கு வேண்டும். ஆன்மீகத்தின் நுழைவாயில் தியானம் என்று கூறலாம். மனதில் மன அழுத்தம் இருந்தாலோ வேறு ஏதோ ஒருவகையில் மனம் சஞ் சலப்பட்டாலோ தனிமையில் அமர்ந்து தியானம் செய்யும்போது மனம் மென்மையாகும்,

முதலில் நமக்கு ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டும். அதற்கு தவறாமல் சத்சங்கத்தை நாடுவததற்கு வேண்டும். ஆன்மீகத்தில் சத்விசாரம் செய்வதற்கு சத்சங்கம் மிகவும் உதவிகரமாக இருக்கும். சத்சங்கத்தில் நாள்தோறும் தவறாமல் கலந்து கொள்வதால் ஆன்மீக சிந்தனைகள் நம்மிடம் இயல்பாக ஏற்பட்டுவிடும். மன ஒருமைப்பாடு நம் மனதில் ஏற்பட்டு விடும். ஜீவவிசாரம், சிஷ்டி விசாரம், மகாவாக்கிய விசாரம், பலன் விசாரம் என ஆன்மீகத்தை ஞானிகள் வகைபடுத்தியுள்ளனர்.

ஜீவவிசாரம் என்பது ஜீவனுக்கும்



ஆன்மாவுக்கும் என்ன உறவு மற்றும் நான் யார் என்பது குறித்த விசாரம் ஆகும். சிஷ்டி விசாரம் என்பது உலகம் எவ்வாறு உருவானது? உலகத்தை படைத்த சக்தி எது? என்பது குறித்த ஆழ்ந்த சிந்தனைதான் சிஷ்டி விசாரம் என்பதாகும். மகாவாக்கிய விசாரம் என்பது ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் உள்ள உறவு என்பது பற்றிய விசாரம் ஆகும். இந்த ஆன்மீக விசாரங்களினால் என்ன பலன் ஏற்படும் என்பது பற்றி அறிவது உணர்ந்து கொள் வது பலன் விசாரம் ஆகும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

ஆன்மீக விசாரங்களில் நமது மனம் ஆழ்ந்து ஈடுபடுவதினால் ஆன்மீகத்தில் முன்னேற்றம் காண முடியும். அதன் மூலம் ஆன்மீகத்தில் உண்மை நிலை அறிந்து மனம் அமைதி பெறும்.

ஆன்மீகத்தில் தத்துவ விவேகம் என்றால் என்ன? தத்துவம் என்றால் சத்தியம் அல்லது உண்மைப்பொருள், மெய் உணர்வு என்று ஆன்மிகம் கூறுகிறது. ஆன்மீகத்தில் விவேகம் என்றால் ஆன்மீக அறிவு ஆகும். ஆன்மீக அறிவு என்பது உண்மைநிலையைச் சரியாகப் புரிந்து கொள்வது ஆகும். சத்தியம் அசத்தியம் இரண்டும் கலந்தே உலகில் காணப்படுகிறது. சத்தியம் என்பது உண்மை. அசத்தியம் என்பது கானல்நீர் போன்றது. உலகில் காணப்படும் பொருள்களில் செயல் பாடுகளில் உண்மையும் பொய்யும் கலந்தே காணப்படுகிறது. அதனை நமது ஆன்மீக அறிவினால் அறிந்து கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக தூரத்தில் ஒரு கயிறு கிடப்பதைப் பார்த்து, அதனை நாம் பாம்பு என்று கருதி பயம் கொள்கிறோம். எனவே பயந்துகொண்டே நாம் அருகில் சென்று பார்த்த பிறகு அது பாம்பு இல்லை கயிறு என்று அறிந்தவுடன் மனதில் ஏற்பட்ட பாம்பு என்ற பயத்திலிருந்து விடுதலை அடைகிறோம்.

சத்தியம் என்பது உண்மை, அசத்தியம் என்பதை நாம் ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அதுவும் சத்தியம் என்று உணர முடியும். தூரத்தில் உள்ள கயிறு கிடப்பதைப் பார்த்து நாம் பாம்பு என்று நினைத்து பயம் கொள்கிறோம். உலகில் கயிறு என்பதும் உண்மை. அதேபோல் உலகில் பாம்பு என்பதும் உண்மை. சிலநேரங்களில் நமக்கு பாம்பு கூட தூரத்தில் இருந்து பார்க்கும்போது கயிறாகத் தோன்றலாம். நமது விவேகத்தின் மூலமாக உண்மை எது என்று உணர்ந்து கொள்ள முடியும்.

உண்மையான யானையைப் போல் மரத்தினால் செய்யப்பட்ட ஒரு பெரிய யானைப்பொம்மையை பார்க்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். நமக்கு யானை தெரியாது மரம்தான் தெரியும். அதே யானைப்பொம்மையை ஒரு குழந்தையிடம் காட்டினால் யானை என்று நினைத்து பயப்படும். நமக்கு மரமாகத் தெரிவது குழந்தையின் கண்களுக்கு மனதுக்கு யானையாகத் தெரிகிறது. அறிவு தெளிந்த நமக்கு மரம் என்பது நமது பார்வையில் உண்மை. குழந்தையின் அறிவு தெளிவில்லாத காரணத்தால் மரம் யானையாகத் தெரிவது குழந்தையின் பார்வையில் உண்மையாகும். இதனைப் பற்றி திருமூலர் பத்தாம் திருமுறைப் பாடலில்,

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைத்தது மாமத யானை
பரத்தை மறைத்தன பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தன பார்முதல் பூதமே

என்று விளக்கியுள்ளார். சிற்பியின் கைவேலைப்பாட்டினால் மரத்தை உணர முடியாமல் மறைத்து, மரத்தால் செய்யப்பட்ட பெரிய யானையின் தோற்றம், மக்களை அது மயக்குகிறது. ஆயினும் சிற்பியினது வேலைப்பாடுகளை அழித்து மரத்தினுள்ளே அது மறைத்து விட்டோமானால்,அந்த மரயானையை இருந்த பொருள் அழியாதிருப் பினும் மரத்தினுள்ளே யானை மறைந்து விடுகிறது. அதுபோல, பரம்பொருளால் இயங்குகின்ற இந்த உலகம், ஆன்மா தோன்றிய காலத்தில் தானே சுதந்திரமாய் இயங்குவனாய் அதற்குக் காட்சியளிக்கும். ஆயினும் குருவருளால் ஞானத்தைப் பெற்ற முக்தி காலத்தில், உண்மை ஞானம் பொது ஞானத்தினை அழித்து விடுகிறது. அதனால் இந்த உலகம் சுதந்திரம் அற்றொழியப் பெரும் பொருளின் இயக்குதலே விளங்கி நிற்கும் என்பது பாடலின் பொருளாகும்.

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

எங்கள்
சேவைக்கு
உங்களின்
உதவிக்கரம்

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள்
ரூ.10 முதல் தங்கள்
வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி
எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள்,
கீழ்காணும் ஸ்கேனர் மற்றும்
வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
G Pay | पे | Paytm | BHIM Baroda Pay | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**